பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 01 | வெள்ளிக்கிழமை | (16.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 210

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# கருணாவின் சகாக்கள் இருவர்

# மட்டு. சிறையில் சுட்டுக்கொலை

## துரோகிகளைக் கொன்றுவிட்டதாக கூரை மீது ஏறி நின்று ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நேற்றுஅதிகாலை 6.30 மணியளவில் சக கைதி ஒருவரால் கருணா அணியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மற்றொரு கைதி துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

**கொலைச் சந்தேகநபர் நான்குமணி நேரம் சிறைச்சாலைக் கூரை மீது ஏறிநின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.**

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விசேட சிறைக் கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதிகளான மேற்படி கருணா அணியைச் சேர்ந்த சச்சி மாஸ்டர், தீபன் ஆகிய இருவரையும குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுவரும் பொது மகனான துறை நீலாவணையைச் சேர்ந்த மகேந்திரன் புவிதரன் (வயது23) என்ற சந்தேக நபரே துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களுள் ஒருவர் கருணாவின் மிக நெருங்கிய சகாவான சச்சி மாஸ்டர் என அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை மகேந்திரன் என்றும் மற்றையவர் தீபன் என்று அழைக்கப்படும் சரவணமுத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## சச்சி மாஸ்டரின் துப்பாக்கியாலேயே அவரையும் சகாவையும் சுட்டேன்

### சந்தேக நபர் பொலிஸாருக்கு வாக்குமூலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட சச்சி மாஸ்டர் கொலையாளியுடன் நெருங்கிப் பழகி வந்ததாக ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பழகி வந்ததுடன் அவரிடம் சென்று ஆங்கிலமும் கற்று வந்துள்ளார். நேற்றுக்காலை 6.30 மணிக்கு சிறைக்கூடம் திறக்கப்பட்ட பின்னர் சச்சிமாஸ்டர் உறக்கத்தில் இருந்த சமயம் கொலையாளி அங்கு சென்று சச்சிமாஸ்டரைச்

சுட்டுக் கொன்றுவிட்டு மூன்றாவது நபரான முரளி என்பவரையும் துப்பாக்கியால் சுட்டபோது அவருக்கு கையில காயம் ஏற்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நீதியமைச்சர் அவசர உத்தரவு

## சிரேஷ்ட அதிகாரி சிறைக்கு விஜயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்றுக் காலை இரண்டு கைதிகள் சக கைதி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதியமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சச்சி மாஸ்டர் என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை சாந்தகுமார், அக்கரைப் பற்றைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரன் என்பவரும் கொல்லப்பட்டும், தியாகராஜா முரளிதரன் என்ற மற்றொரு கைதி காயமடைந்தும் இருந்தார்.

இக்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதி அமைச்சர் விடுத்த பணிப்புரையை அடுத்து சிறைச்சாலைத் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்துள்ளார்.

சிறைச்சாலைக்குள் இருந்த கைதிகளிடம் துப்பாக்கி எவ்வாறு வந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜயந்த தனபால மட்டு.விஜயம்

(கொழும்பு)

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார். இதன் முதற்கட்டமாக அவர் இன்று மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளார்.

மட்டக்களப்புக்குச் செல்லும் அவர் அங்கு போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளையும், அரச பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் சமாதானச் செயலகப் பணிப்பாளராக நியமனம்பெற்ற ஜயந்த தனபால வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும்.

இதேவேளை, அவர் மட்டக்களப்பு விஜயத்தை முடித்துக் கொண்டு, திருகோணமலை, வவுனியா, மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார். எனினும் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை எப்போது மேற்கொள்வாரென அறிவிக்கப்படவில்லை.

(ச-121)

## வெடிமருந்துகளுடன் கரை திரும்பிய

## போராளிகள்

மாஸ்டர் கொலையாளியுடன் நெருங்கிப் பழகி வந்ததாக ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

சச்சிமாஸ்டரிடம் மிகவும் சாதுரியமாக கொலைச் சந்தேக நபர் சிறைக்கூடம் திறக்கப்பட்ட பின்னர் சச்சிமாஸ்டர் உறக்கத்தில் இருந்த சமயம் கொலையாளி அங்கு சென்று சச்சிமாஸ்டரைச் சுட்டுள்ளார். பின்னர் அவருக்கு அருகிலருந்த தீபன் என்பவரையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு.சிறைச்சாலைச் சம்பவம் கடும் நடவடிக்கை எடுக்குக

## ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. அவசர கடிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தங்கியிருந்த கைதியொருவர் அங்கு தங்கவைக்கப்பட்டிருந்த கைதிகள் இருவரை சுட்டுக் கொலை செய்தமை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்துமாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற கொலைச்சம்பவத்தையடுத்து விமல் வீரவன்ஸ ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் குறித்து பாராளுமன்றில் 3நாள் விவாதம்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார நிர்வாக சபை குறித்த மூன்று நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறும்.

ஒத்திவைப்புக் கோரிக்கையாக இந்த விவாதம் நடைபெறும். இம்மாதம் 20ம், 21ம், 22ம் திகதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விவாதத்திற்கான கோரிக்கையை ஜாதிக ஹெல உறுமய விடுத்திருக்கிறது. இதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், இம்மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து மேலும் கலந்துரையாடப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# போராளிகள் தடுக்கப்பட்டனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மூன்று விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

அவர்கள் தாம் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எனத் தெரியப்படுத்தியபோதும் அவர்களை படையினர் மேற்கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை.

இதனையடுத்து படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து படை அதிகாரி ஒருவர் தலையிட்டு நிலைமையைச் சுமுகமாக்கி போராளிகளை யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதி அளித்தார். (ச-08)


அன்பு மாணவர்களே!

உள்ளே!

க.பொ.த (சா/த) பரீட்சை

மாதிரி வினாத்தாள் தமிழ்மொழியும்

இலக்கியமும் – 11

ஆக்கம்:

சி.சிவகாந்தினி

ஆசிரியர்


# வெடிமருந்துகளுடன் கரை திரும்பிய 4 மீனவர்களுக்கு விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீநோர் இறங்கு துறை முகத்தின் ஊடாக கடற்றொழிலுக்குச் சென்று திரும்பிய நான்கு மீனவர்களை பொலிஸார் கைது செய்து நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற மேற்படி நான்கு மீனவர்களும் கரை திரும்புமபோது ஆபத்தை விளைவிக்கக் கூடிய ரீ.என்.ரீ வெடி மருந்து ஒரு கிலோ கிராமும் வெடிக்க வைக்கும் கருவியான 4 டைனமற்றர்களும் அவர்களிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது. இதனையடுத்து 4 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை பொலிஸார் நேற்று நீதிமன்றில் ஆஜர்செய்த போது,

(12ஆம் பக்கம் பார்க்க)

# குடும்பப் பெண் காயம்

(முல்லைத்தீவு)

காணியை துப்புரவு செய்து குப்பைக்குத் தீ வைத்தபோது வெடி பொருள் ஒன்று வெடித்ததில் குடும்பபெண் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது. இதன்போது அதே இடத்தைச் சேர்ந்த திருமதி இளஞ்சிங்கம்(வயது50) என்பவரே காயமடைந்தவராவர்.

காயமடைந்தவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினர் அப்பகுதியில் நிலைகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. படையினர் கைவிட்டுச் சென்ற வெடி பொருளே வெடித்திருக்கலாமெனக் கூறப்படுகிறது. (ச-8)

# சயினைற்றுடன் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தில் நேற்றுக்காலை சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் இரண்டு சயினைற் குப்பிகள் கைப்பற்றப்பட்டதாக முகத்துவாரப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி டி.எஸ்.விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவரைத் தொடர்ந்து விசாரணை செய்து வருவதாக முகத்துவாரப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (த-121)

# நிலக்கண்ணி வெடிகளுக்கு எதிரான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்

## நிலக்கண்ணிவெடிகளைத் தடைசெய்வதற்கான ஆதரவுக்குழு அரசிடமும் புலிகளிடமும் கோரிக்கை

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நிலக் கண்ணி வெடிகளுக்கு எதிரான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டுமென நிலக்கண்ணி வெடிகளை தடை செய்வதற்கான ஆதரவுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிகளைத் தடை செய்வதற்கான ஆதரவுக் குழுவின் செய்தியாளர் மாநாட்டின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சர்வதேச கருவிகளைப் பயன்படுத்துவதற்கான தடை தொடர்பான ஒப்பந்தம் ஒன்றிலும், நிலக் கண்ணி வெடிகளைப் பாதுகாப்பதற்கு எதிரான ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட வேண்டும் எனவும் இவ்வமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்களில் 143 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதாகவும், நிலக் கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கான ஆதரவுக் குழுவில் சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்கள், மனிதாபிமான அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்புக்கள் என்பன அங்கம் வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போரினை அடுத்து, 1995 ஆம் ஆண்டு முதல் கொண்டு இன்று வரையான காலப்பதியில் நிலக் கண்ணிவெடி காரணமாக 153 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகவும், 879 பேர் வரையில் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், நிலக்கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளின் எண்ணிக்கைகள் தொடர்பான விடயங்களும், படையினர் தொடர்பான விடயங்களும், வெளியாகவில்லை.

வடக்கிலும், கிழக்கிலும் பல்வேறு பகுதிகளில் நிலக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத நிலைமைகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கமும், விடுதலைப் புலிகளும், குறிப்பிட்ட இவ்விரு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவதன் மூலம், இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள பொதுமக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியேறுவதற்கு உதவ வேண்டும் எனவும் நிலக்கண்ணி வெடிகளை தடை செய்வதற்கான ஆதரவுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(உ-10)

## முல்லேரியாவில் மூவர் குத்திக்கொலை

(கொழும்பு)

ஹப்புத்தளை முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் காலை மூவர் கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மூன்று இளைஞர்களும் தங்கியிருந்த வீட்டிலிருந்த நகைகளும்சுமார் 2 இலட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இக் கொலைச் சம்பவம் பாதாள உலகக் கோஷ்டியினரின் கைவரிசையாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(த-61,18)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தைப் பலப்படுத்தி அதன் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர் வரும் ஓகஸ்ற் மாதம் முதலாம் திகதி ஞாயிறுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஒன்றியத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-4,19)

# விகாரை மீதான தாக்குதலுடன் தொடர்புடைய பிக்கு கைது

(கொழும்பு)

பொலநறுவை ஹிங்குராங் கொட விகாரையின் மீது இடம் பெற்ற தாக்குதல் தொடர்பாக தேடப்பட்டு வந்த பௌத்த பிக்குவைத் தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலரஸ்கமுவவில் கைது செய்யப்பட்ட இப்பிக்கு பொலநறுவை நீதவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டுள்ளார். இவ்விகாரையில் இருந்த கருணா குழுவைச் சேர்ந்த 14 தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைதாகி மூன்று நாட்களின் பின்னர், இவ்விகாரையின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது.

இத் தாக்குதலில் கடும்காயங்களுக்குள்ளான விகாரையின் பிரதம பிக்கு வண.கொடிக முவே சுகத தேரர் கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்திருந்தார்.

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக ஆரம்பத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும், இவ்விகாரையில் இருந்த பௌத்த பிக்கு ஒருவர் இத்தாக்குதலின் பின்னர் திடீரெனக் காணாமல் போனதையடுத்து, பிக்குகளுக்கிடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு காரணமாகவே இத் தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் என பொலிஸார் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட பிக்குவுக்கும், தாக்குதலின் போது உயிரிழந்த விகாரையின் பிரதம குருவுக்கும் இடையில் நீண்ட நாட்களாகவே முரண்பாடுகள் காணப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரிய வருவ்தாகவும் தெரிவித்துள்ள பொலிஸார், கைது செய்யப்பட்ட பிக்குவ்டன் தலைமறைவாகியிருந்த இன்னுமொரு இளம் பிக்குவைத் தாம் தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

(உ-121)

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்

# அரசுடன் இணைவது குறித்து இருவேறுபட்ட கருத்துக்கள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைவதா, இல்லையா என்ற இரண்டு நிலைப்பாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பாக இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உபதலைவர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமோ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தம்முடன் இணைவது உறுதியென ஊடகங்களில் கருத்து வெளியிட்டு வருகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து விடலாமென ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்றில் ஊகம் வெளியிட்டுள்ளன.

215 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் 106 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ளமை அதனை ஒரு பலமற்ற அரசாங்கமாகவே இனங்காட்டியுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளுக்கும் ஏனைய கட்சிகளின் ஆதரவை நாடவேண்டிய தேவையும் காணப்படுகின்றது. இந்நிலையில் 8 ஆசனங்களைத் தம்வசம் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணையுமானால், அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகை 114 ஆக அதிகரிப்பதோடு, நாடாளுமன்றத்தில் அது அறுதிப் பெரும்பான்மையுள்ள கட்சியாகவும் விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## "துளித்துளி வைரங்கள்..." சனியன்று வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பொன். கணேசமூர்த்தியின் "துளித்துளி வைரங்கள்..."கவிதை நூல்




வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்.ப. நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சி. சிவமகாராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா, யாழ். ப.நோ.கூ.சங்கத் தலைவர் சொலன் சூ.சிறில், வலி. வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா, ஆசிரியர் என். விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையை யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் மதிப்பீட்டுரைகளை திருமதி மனோன்மணி சண்முகதாஸ், ஆ.தங்கவேலாயுதம், ப.பரமநாதபிள்ளை, ஐ.சாந்தன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

(உ)

# பத்திரிகையாளர் அச்சுறுத்தலுக்காளாவது சமாதான முயற்சிகளைப் பாதிக்கின்றது

## எல்லைகளற்ற சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு

கிழக்கு மாகாணத்தில் பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல் ஊடகத்துறையின் சுதந்திரத்தையும் சமாதான முயற்சிகளையும் பாதிப்பதாக அமைந்துள்ளது என பிரான்ஸைத் தளமாகக் கொண்ட எல்லைகள் அற்ற சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடன் நடவடிக்கை எடுத்து, இதற்கு காரணமானவர்களைத் தண்டிக்கவேண்டும் எனவும் அவ்வமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

சுமார் 12 பத்திரிகையாளர்களின் கருத்தைக் கொண்டுள்ள இவ்வறிக்கையில் மே மாதம் கொல்லப்பட்ட மட்டக்களப்பின் பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன், தனது மரணத்திற்கு முன்னர் தெரிவித்த கருத்துக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

செய்திகள் எமக்குக் கிடைக்கின்ற போது, அதனை இருதரப்பினிடமும் உறுதிப்படுத்த முடியாத நிலையில்தான் ஊடகவியலாளர்கள் உள்ளார்கள். உள்ளூர் செய்திகளும், செய்திக் கண்ணோட்டங்களும் கொழும்பில் வெளியாகின்றபோது அதனால் நாம் பழிவாங்கப்படுகின்றோம் என ஐயாத்துரை நடேசன் எல்லைகள் அற்ற சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பிடம் தெரிவித்துள்ளதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இன்றைய நிலையில், இலங்கையின் ஊடக சுதந்திரத்தை பேணிப் பாதுகாப்பதற்கு 9 பரிந்துரைகளையும் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-121)

# சர்வகட்சி உத்தேசக் குழுவில் ஐதே.க.வின் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு முயற்சி

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொள்ளும் பட்சத்தில், அதில் பங்கேற்கக்கூடிய சர்வகட்சி குழு ஒன்றை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், உத்தேச அரசியல் அமைப்பு பேரவையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பும் இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இச் சந்திப்பில் கலந்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) உறுப்பினர்கள் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில், பேச்சுவார்த்தைகளைத் தொடக்குவது என்ற விடயத்தை மக்கள் முன் கருத்துக்கணிப்புக்கு விட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க நாட்டிற்குப் பாதகமாக அமையும் எந்தவொரு தீர்மானத்தையும் தாம் மேற்கொள்ளப் போவதில்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி அரசின் உத்தேச குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காக பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

(உ-60,10)

# வடகிழக்குப் பாடசாலைகளில் 4 ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளினை அபிவிருத்தி செய்யவென நிக்கொட் திட்டத்தின் கீழ் 900 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6வருடங்களுள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 300ற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் கட்டட, தளபாட, சுகாதார குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணத்தின் 8மாவட்டங்களிலும் உள்ள 24 கல்விவலயங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 2 பாடசாலைகளில் 150பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அத்துடன் 4ஆயிரம் ஆசியர்களுக்கு இம்மாகாணத்தில் பதவி வெற்றிடங்களும் காணப்படுகின்றது.

(உ-4,64,61)

யாழ்ப்பாணம்

## வெள்ளி முற்றம்

# திணை விதைத்தவன் அறுப்பான்...

வ. சின்னப்பா
தனங்கிளப்பு

"களிசறை நாய் உன்னையும் நான் மினக்கிட்டு பெத்தேனே. உன்னோடை படிச்ச சிறிதரனுக்கு பதினைஞ்சு லச்சம் காசு ,வீடு வளவோடை ஐம்பது தங்கப் பவுண் நகையும் குடுக்கிறாங்களாம். நாளையிண்டைக்குக் கலியாணமாம்"

தாய் சொன்ன ஆற்றாமை வார்த்தைகள், ஏற்கனவே பரீட்சையில் தோல்வி கண்டு வேதனைப்பட்டிருந்த குகநாத்திற்கு வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போல இருந்தது. அன்று இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. பெற்ற தாயே தன்னை வெறுத்து ஒதுக்கும் அளவிற்கு இப்படி ஏசியதை அவனால் பொறுக்கவே முடியவில்லை. அவன் மிக மிக வேதனைப்பட்டான். எனினும் தாயின் பக்கம் போதிய நியாயம் இருப்பதாக அவனுக்குப்பட்டது. தனது ஒவ்வாத போக்குகளின் விளைவே தன்னை இந்நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருப்பதை அவன் உள்ளம் இப் பொழுது ஒப்புக்கொண்டது. அவனை அறியாமலே அவனது பாடசாலை நாட்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தன.


1999 ஆம் ஆண்டு பிற்பகுதியிலே தனங்கிளப்பிலே மூண்ட கொடிய யுத்தத்தினால் எல்லா உடமைகளையும்வீடுவாசல்களையும் விட்டு விட்டு உடுத்த உடுப்புக்களுடன் இடம்பெயர்ந்து ஏதிலிகளாக வந்து கோப்பாயிலே தங்கி வாழ்ந்த போது அவனது தாய் பெருஞ்சிரமப்பட்டு, அதிபரைக் கெஞ்சி மன்றாடிக் குகநாத்தைக் கோப்பாய் புனித மரியாள் கல்லூரியிலே சேர்த்துப் படிக்க வைத்தாள். ஒரு வித ஆதாரமும் இன்றி இடம் பெயர்ந்த செல் லம்மா, குகநாத் ஆகிய இருவரது வாழ்வும் அரசின் நிவாரண அரிசி யோடு ஒருவாறு நகர்ந்தது. எனினும் குகநாத்தின் படிப்புச் செலவுகளை ஈடுசெய்ய அயல் வீடுகளிலே பற் பல வேலைகளைச் செய்து ஓரளவு சம்பாதித்தாள் செல்லம்மா. தன் மகன் படித்துப் பட்டம் பெற்று பெரியவனாகி அரசாங்க உத்தியோகம் பார்ப்பான். அப்பொழுது தனது வாழ்வும் ஒளி பெறும் என்ற அசையாத நம்பிக்கையிலேயே அவள் காலத்தை ஓட்டினாள். இந்த நிலையிலே அவள் தனது பசி பட்டினிகளையும் தேக நோவையும் கூட மறந்தாள். அன்றைய இடப்பெயர்விலே, சாவகச் சேரிநகருக்கு அருகே ஓடி வந்து கூடி நின்ற போது அவளது கணவன் விநாயகமூர்த்தி, அந்தப் பாழும் செல்பட்டு இறந்திருக்கா விட்டால் அவளுக்கு இந்த நிலை வருமா?

"என்னைப் போலவே இடம் பெயர்ந்த சிறீதரன் தனது படிப்பிலே கண்ணுங்கருத்துமாக இருந்தான். இன்று அவன் யாழ். மக்கள் வங்கிக் கிளையிலே பெரிய உத்தியோகம் பார்க்கிறான்"

குகநாத்தின் சிந்தனை நீண்டது. "எனது படிப்பிலே நான் கவனஞ் செலுத்தினேனா? படிக்கவேண்டிய நேரத்திலே,இன்று படிப்போம் நாளை படிப்போம் என்று நான் காலத்தைக் கடத்தினேன். பரீட்சை நெருங்கிய போது படிக்க வேண்டிய விடயங்கள் நிறையவே இருந்தன. இதைப் படிப்பதா, அதைப்படிப்பதா என்று ஏக்கத்திலே என்னால் எதையுமே படிக்க முடியவில்லை. அன்றாடம் படிக்கும் பாடங்களை அன்றன்றே மனதில் நன்கு பதித்து விடவேண்டும் என்று அடிக்கடி அதிபர் சொன்னார் . நான் கேட்டேனா? இன்று பரீட்சைக்கு முகங்கொடுக்கவே என்னால் முடியவில்லை. இந் நிலையில் நான் பரீட்சையில் எவ்வாறு சித்தி எய்துவேன்? நெற்றியின் வியர்வை நிலத்திலே விழவிழ அம்மா உழைத்துத் தந்த பணத்தை நான் அநியாயமாகச் செலவு செய் செய்தேன். கூடாத கூட்டங்களோடு கூடினேன்; குதூகலித்தேன். "பன்றியோடு கூடிய பசுவும் மலம் உண்ணும்" என்று அம்மா சொன்னார் நான் கேட்டேனா?

சீ! அவன் உத்தியோகம் பார்க்கிறான் நான் ஊதாரியாகத் திரிகிறேன். அம்மா என்னைக் 'களிசறை நாய்' என்று ஏசுவதிலே என்ன தவறு இருக்கிறது? நான் பாடசாலையில் இருந்தபோது அவ்வப்போது எனது ஆங்கில ஆசிரியர் எத்தனை அறிவுரைகளைச் சொன்னார்? நான் கேட்கவில்லையே! "யூ ஆ.த ஆக்கிரெக்ற் ஒவ் யுவர் ஓண் போச்சூன்" (**You are the architect of your own fortune**) உனது சொந்த எதிர் காலத்தைக் கட்டி எழுப்பும் சிற்பி நீயே தான். எவ்வளவு அர்த்தம் பொதிந்த வாக்கியம் அது? "தோஸ் கூ பிளான்ஸ் தோண்ஸ் சால் நொட் கெத றோசஸ்" (**Those who plants thorns shll not gather roses**) முள்ளுச் செடிகளைப் பயிரிடும் ஒருவன் றோசாப் பூக்களை அறுவடையாகப் பெறமுடியாது.

இனி என்ன செய்வது? கடந்த காலம் திரும்பி வருமா? அதிபர் அடிக்கடி காலைக் கூட்டங்களிலே சொல்லுவார். "ரைம் அன்ட் ரயிட் வெயிற் போ நோ மான்" (**Time and tide wait for no man**) காலமும் கடலலையும் யாருக்கும் காத்திராது.




குகநாத்திற்கு எண்ணங்கள் தடுமாறின இடையே மைதிலியின் ஞாபகம் வந்தது.

மைதிலி இன்று என்னை ஓரங்கட்டி விட்டு சிறீதரனுக்கு வாழ்க்கைப் படத்தீர் மானித்து விட்டாள். அவளிலே என்ன தவறு இருக் கிறது? என்னைப் போன்ற ஒரு "களிசறை நாய் க்கு யாரேனும் கழுத்தை நீட்டு வார்களா?

இரவு பன்னி ரண்டு மணியாகியும் குகநாத்திற்கு தூக்கம் வரவில்லை. சிறீ தர் வீட்டிலே, கல்யாண ஏற்பாடுகள் வெகு விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மக்களின் ஆரவார ஒலியும் ஏனைய ஓசைகளும் தெளிவாகக் கேட்டன.

"எனது நிலையை நான் யாரிடம் சொல்லி அழுவேன்? அம்மா அங்கலாய்க்கும் அந்தத் தொகையான சீதனத்தைக் கொடுப்பவள் மைதிலியே என்பதையும், அவள் என்னையே முதலில் விரும்பியிருந்தாள் என்பதையும், எனது தவறான போக்கினாலேயே என்னை வெறுத்து விட்டு இன்று சிறீதரனுக்குக் கழுத்தை நீட்டுகிறாள் என்பதையும் அம்மா அறிந்தால் இன்னும் வேதனைப்படுவாள். இதை யாருக்கும் வெளிப்படுத்தினால் மைதிலி வாழ்விலும் மண்போட்டதாக அமைந்து விடுமே"

குகநாத் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். அம்மா ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் குகநாத் பாயை விரித்தான். தனது பழைய விரிப்பை எடுத்துப் பாயின் மேல் விரித்தான். தலையணையை வழமையாக வைப்பது போல் தலைமாட்டில் வைத்தான். தனது முடிவில் அவன் உறுதியாக இருந்தானெனினும் அவனது உள்ளம் மைதிலி நினைவால் சற்றுத் தடுமாறியது. இறுதித் தடவையாக மைதிலியின் கடிதத்தை எடுத்து வாசித்தான்.

திரு.குகநாத் அவர்கட்டு,

மைதிலி எழுதுகிறேன் நானும் எனது தந்தையை இழந்து எனது தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்தேன். நீங்களும் அவ்வாறே இருந்தீர்கள் இருவர் நிலைமைகளும் ஒன்றாக இருந்ததால்,ஆரம்பத்தில் உங்கள் மீது எனக்கொரு அனுதாபம் ஏற்பட்டது. நாளடைவில் இந்த அனுதாபம் காதலாகப் பரிணமித்தது உண்மையே. எனினும் நீங்கள் நேரான பாதையை விடுத்து தவறான பாதையிலே சென்று கொண்டிருந்ததால் நான் உங்களிடமிருந்து தூர விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. இடம் பெயர்ந்து நீங்கள் வந்த போது சாவகச்சேரிச் சந்தையிலே ஷெல் பட்டுத் தலைவேறு, முண்டம்வேறாகக் கிடந்த ஒரு மனிதனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீகள். அவரே தான் என் அப்பா. தலை வேறு, முண்டம் வேறாகக் கிடந்த என் அப்பாவின் சடலத்தை நாங்கள் கண்டபோது பட்ட வேதனையை விபரிக்க வார்த்தைகளே இல்லை.

உங்கள் அப்பாவிற்கும் நெற்றியிலே புகுந்த "ஷெல் பீஸ்" தலையைத் துளைத்துக்கொண்டு பிடரி வழியாக வெளியேறி இருந்ததாக முன்பு சொன்னீகள். அதைக் கேட்ட போதும் எம்மிடையே ஒரு சிறு தொடர்பு இருப்பதாகவும் நான் உணர்ந்தேன். அதனாலும் என் உள்ளம் என்னை உங்கள் பால் ஈர்த்தது.

தலையில்லாத முண்டத்தைக் கண்ட நான் முதல் என் அம்மா, தலை அலங்காரம் செய்வதில்லை. எப்பொழுதும் கூந்தலை வெறுமனே அள்ளிச் சொருகியிருப்பாள்.

பொட்டின்றியும் பூவின்றியும் வாடிய மலராகத் திரிந்த அவளை "அறுதலி, முழுவிசளத்துக்குக் கூடாதவள்" என்று ஊரே ஒதுக்கி வைத்தது. இந்த நிலையிலே நானும் அவளை ஒதுக்கினால் அவள் நிலை என்ன ஆகும்? அதனாலே தான் அழுதழுது நான் இம் முடிவை எடுத்தேன். உங்கள் கொட்டில் வீட்டையும் ஏழ்மையையுங் கண்டு நான் இந்த முடிவை எடுக்கவில்லை. இறை விசுவாசமுள்ள எனது அப்பா அடிக்கடி சொல்லுவார், ஏழைகளோடு தான் இயேசு நாதர் இருப்பார் என்று. மாடிமனைகள் பல இருக்க மாட்டுக்கொட்டிலிலே தான் அவர் பிறந்தார். மாணவர் மன்றத்திலே நீங்கள் பாடிய அந்தப் பாட்டு இப்பொழுதும் என் காதுகளில் ஒலிக்கிறது.

**மாடு கட்டும் தொழுவத்தில்**
**யேசு பிறந்தார்- மண்ணில்**
**மக்களெல்லாம் போற்றும்படி**
**அவர் வளர்ந்தார்**
**பாடுபட்டு சிலுவையை அவர்**
**சுமந்தார்- மக்கள்**
**பாவச்சுமை ஏற்பதற்கே இதைப்**
**புரிந்தார்.**

என்ன செய்வது? நான் இந்த முடிவை ஏற்று அழுவது என் அம்மாவை மகிழ்ச்சிப்படுத்துவதற்கே. ஆதலால் என்னை மன்னித்து விடுங்கள் அன்பரே.

"தினை விதைப்பவன் தினை அறுப்பான் " என்பார்கள். நீங்கள் தினை விதைக்கவில்லையே, வினை அல்லவா விதைத்தீர்கள்? என்னைப் பெற்ற தாய்க்கு நான் நன்றிக் கடன் செலுத்தவேண்டாமா?

தனது இளவயதிலே என் அப்பாவைப் பறிகொடுத்த என் தாய் தன் பருவ உணர்வுகளை ஓரங்கட்டி வைத்து விட்டு என்னை வளர்த்து ஆளாக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாக ஈடுபட்டாள். தனது இளமை ததும்பும் நிலையிலே வெள்ளைச்சேலை அணிந்து வெறுங்கழுத்தோடு எனது தாய் வெளியிலே அடிக்கடி வருவதைப் பார்க்க எனக்கு எவ்வளவு வேதனையாக இருந்தது தெரியுமா?. அப்பாவைப் போலன்றி அம்மா சைவ ஆசாரத்தையே பெரிதும் விரும்பினாள். அப்பா தேடி வைத்த சொத்திலே இப்பொழுது அம்மா என்னை விலை பேசி விட் டாள். ஆகவே என்னை மறந்து விடுங்கள். கருணை கூர்ந்து என் வாழ்விலே குறுக் கிடாதீர்கள்.

இப்படிக்கு
மைதிலி.

வாசித்து முடிந்ததும் குகநாத்தின் கைகள் அக்கடிதத்தைச் சுக்கு நூறாக் கிழித்து எறிந்தன.

மறுநாள் பொழுது வழமை போலப் புலர்ந்தது. செல்லம்மா முற்றத்தைக் கூட்டிப் பெருக்கினாள். சிறீதரின் வீட்டிலே மக்கள் கூடி நின்று வாழை தோரணங்களைக் கட்டினார்கள் . தகரப் பந்தல்கள்போடும் சத்தம் தடல் புடலாகக் கேட்டது. ஆத்திர மேலீட்டினால் ஒரே வயதான தன் மகனைக் "களிசறை நாய்' என்று முதல் நாள் ஏசியது அவளுக்கு மிகுந்த வேதனையாக இருந் தது. "பெற்ற மனம் பித்து" என்பது பிழை யான வாக்கியமா? அடுப்பை மூட்டி, நீரைக் கொதிக்க வைத்துச் சூடான கோப்பி போட்டாள் செல் லம்மா. "தம்பி எழும்பி முகத்தைக் கழுவடா கோப்பி போட்டு வாறன்" செல்லம்மா சற்றே உரத்துச் சொன்னாள்.

தம்பியிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை.

"தம்பீ!"

"..............."

தம்பி எழும்பவில்லை. செல்லம்மா கோப்பியை எடுத்துக் கொண்டு தம்பியிடம் வந்தாள். பாய் விரித்தபடி கிடந்தது. யாரும் படுத்து உறங்கியதற்கான அறிகுறி ஏதுமின்றி, விரிப்பும் தலையணையும் எதுவித சுருக்கங்களுமின்றிக் காணப்பட்டன.

"தம்பி எங்கை போட்டான்?"

செல்லம்மாவுக்குத் தேகம் நடுங்கத் தொடங்கியது "கொல்லைப் பக்கம் போயிருப்பானோ?" நெஞ்சம் பதறியது. எங்கும் தேடிப்பார்த்தாள் தம்பியைக் காணவே இல்லை.

"ஐயோ என்ரை ராசா" ஓலமிட்டு அழுதாள் செல்லம்மா.

"சிச்சீ! அழக்கூடாது எதுக்கும் சின்னத்தம்பி வாத்தியாரிட்டைப் போய்ச் சொல்லிப் பாப்பம். அவற்றை மோனும் இவனோடை தானே படிச்சவன்?"

"வா-த்-தி-யா- ர்?"

"ஆரது? எட செல்லம்மாவே, என்ன விட்டவிடியக்காத்தாலை வந்து நிக்கிறாய்?"

"இல்லை வாத்தியார் உவன் குகநாத்தைக் காணேல்லை. எங்கை போட்டானெண்டு தெரியேல்லை" "எங்கை போறது? உங்கினேக்கை தான் நிப்பன். கலியாண வீட்டுப்பக்கம் போனானோ?" "சீச்சீ! அவன் அங்கை போகான்" செல்லம்மா பதறினாள் "ராத்திரிக் கூடக் காணேல்லை வாத்தியார்" செல்லம்மா அழத் தொடங்கி விட்டாள். "என்ன ராத்திரிக்கூடங் காணேல்லையோ? டேய், தம்பி சுரேஸ, ஒருக்கா போய்ப் பாத் துவாடா"சுரேஸ் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தான். அவனைக் காணவில்லை கடைசியாக அவன் இருந்த வீட்டுக்குள் புகுந்து தேடினான். தலையணைக்குக் கீழே கடிதம் ஒன்று கிடந்தது.

அன்புள்ள அம்மா,

நான் குகநாத் எழுதுகிறேன்.

"ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும், தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்று வள்ளுவப் பெருமான் சொன்னது போல, நான் படித்துப் பட்டம் பெற்றுச் சான்றோன் ஆகிவருவேன் , எனது நிழலிலே ஒதுங்கலாம் என்று நீங்கள் கனவு கண்டீர்கள் அம்மா. ஆனால் எனது கடமையில் இருந்து நான் தவறி விட்டேன் .கூடாத கூட்டங்களுடன் கூடி எனது வாழ்வைப் பாழடித்து விட்டேன். அம்மா! என்னைப் படிக்க வைக்க நீங்கள் பட்டதுன்பங்களையெல்லாம் அலட்சியம் செய்த துரோகி நான்; ஆதலால் நான் உங்களிடமிருந்து மட்டுமன்றி இந்த உலகத்திலிருந்தே நிரந்தரமாக விட்டு விலகி விடத் தீர்மானித்து விட்டேன். நாளை உதயத்தின் முன் எனது தீர்மானத்தை நிறைவேற்றி விடுவேன்.

நான் இறப்பது உங்களை அழ வைக்க அல்ல. என்போன்ற இளைஞர்களின் கண்களைத் திறப்பதற்கே. அம்மா சொற்கேளாத பாவியான எனது இறப்பு இந்தச் சமுதாயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். எனது வாழ்நாளை நான் வீணடித்து விட்டேன். எனக்குத் தரப்பட்ட சந்தர்ப்பத்தை நான் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டேன். ஆதாலலேதான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது.

நண்பர்களே! உங்களுக்கும் ஒன்று சொல்லுவேன் காலம் பொன் போன்றது. போன காலம் திரும்பி வரவே வராது. ஆதலால் காலத்தை பொன்செய்யுங்கள். அம்மா! அதை எனது நண்பர்களுக்குச் சொல்லுங்கள். நான் செய்த தவறுக்கு இதுவே எனக்கு ஏற்ற தண்டனை அம்மா. ஆதலால் நான் போய் வருகிறேன் கலங்காதீர்கள்.

இப்படிக்கு
உங்களை உதாசீனஞ்
செய்த மகன் குகநாத்.

செல்லம்மா மயங்கி வீழ்ந்து விட்டாள். செய்தி அறிந்ததும் சின்னத்தம்பி வாத்தியார் பம்பரம் போலத் தொழிற்பட்டார். அவரது ஏவலால் இளைஞர்கள் பலர் எங்கும் தேடினார்கள். உடன் கற்ற அவனது நண்பர்களிடம் விசாரித்துப் பார்த்தார்கள் பலன் ஒன்றும் கிட்டவில்லை.

"இனி அங்கை இஞ்சை பாக்கிறதை விட்டிட்டு உந்தக் கிணறு குளங்களைப் போய்ப் பாருங்கோடா" வந்திருந்த தூரத்து உறவினரான ஒரு வயோதிபர் சொன்னார். எல்லோரும் சுற்றாடலில் காணப்பட்ட வெளிக்கிணறுகளைத் துளாவத் தொடங்கினார்கள். கடைசியாக கோப்பாய் மயானத்தின் அருகே இருந்த பாழ்ங்கிணறு ஒன்றிலிருந்து குகநாத்தின் சடலத்தை அவர்கள் மீட்டு எடுத்தார்கள்.

சடலம் வீட்டுக்குக் கொண்டு வந்த பின்னருங் கூட செல்லம்மா கண் திறக்கவில்லை. இதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த செல்லம்மாவுக்கு திடீர் அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்கநேர்ந்ததால் மனம்பதட்டப்படக்கூடாது என்று வைத்தியர்கள் சொல்லியிருந்ததாகச் செல்லம்மா கூறிய செய்தியைச் சின்னத்தம்பி வாத்தியார் சொன்னார். வயோதிபர் செல்லம்மாவின் மூக்கிலே விரலை வைத்துப் பார்த்தார். சுவாசம் ஓடவில்லை.

அவர் முகம் கறுப்படைந்தது. அங்கும் இங்கும் விழிகளைப் புரட்டி விழித்தார்.


"ம்.... உந்தக் களிசறை நாய் ஆனமானதாக இருந்திருந்தால் இந்தக் குடும்பத்தை ஈடேற்றி இருக்கலாம்.

அதே வயோதிபர் தன் மன நிலையை எரிச்சலோடு வெளியிட்டார். (யாவும் கற்பனை)

# பிரதமர் மீதான தாக்குதலுக்கு ஸர்க்காவி உரிமை கோரினார்

(பக்தாத்)

கடந்த வாரம் ஈராக் பிரதமரைக் குறி வைத்து நடாத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலுக்கு அந்நாட்டின் தீவிரவாத இயக்கத் தலைவரும் மத குருவுமான அபு முஸாப் அல்-ஸர்க்காவி உரிமை கோரியுள்ளார்.




பல இஸ்லாமிய இணையத்தளங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப் பொன்றின்படி ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் உயிர் தப்பிப் பிழைத்துக் கொண்டாலும், அவருடைய தலைக்கு வைக்கப்பட்டுள்ள குறி இன்னமும் விலக்கிக் கொள்ளப்படவில்லை என்றும் இன்னும் அதிகமான தாக்குதல்களை அவர் எதிர் பார்க்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமரின் வளவுக்குள் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் 7 பொதுமக்கள் காயமடைந்தனர். பிரதமர் அப்பொழுது அங்கிருக்கவில்லை. பிரதமரை ஒரு தேசத்துரோகியாக வர்ணித்திருக்கும் ஸர்க்காவி ஜிஹாட் இயக்கத்தின் தலைவராகத் தன்னை அறிவித்துள்ளார். ஆனால் இது ஒரு பொழுதுமே உறுதிப்படுத்தப்படவில்லை. (யே)

# "மின்னல் தீர்மானத்தை" அமெரிக்கா ஆரம்பித்தது

(காபூல்)

எதிர்வரும் செப்டெம்பர் ஒன்பதாம் திகதி ஆப்கானிஸ்தானில் நடாத்தப்படவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் உரிய முறையில் நடைபெற உதவுமுகமாக அமெரிக்கா, "மின்னல் தீர்மானம்" எனும் புதிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.




தேர்தல் பணிகளில் ஈடுபடும் ஐ.நா. மற்றும் உள்நாட்டுத் தேர்தல் பணியாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் பணிகளில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை ஈடுபடும் என்றும், ஏற்கனவே இப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் லெப்ரினன்ட் ஜெனரல் டேவிட் பார்னோ தெரிவித்துள்ளார்.

நேட்டோ உறுப்பு நாடுகள் ஆப்கானுக்கு மேலும் மூவாயிரம் துருப்புக்களை அனுப்பவிருப்பதாகவும் அது தமது பலத்தை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். கடந்த ஞாயிறு தொடக்கம் இடம்பெற்ற தேர்தல் தொடர்பான வன்முறைகளில் இதுவரை 11 பொதுமக்கள் ஆப்கானில் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே)


# ஓரினத் திருமணச் சட்டமூலம் செனட் சபையில் தோல்வியுற்றது

## ஆயினும் போராட்டம் தொடரும்

(வாஷிங்டன்)

ஓரினத் திருமணத்தைத் தடைசெய்யும் சட்ட மூலமொன்றை நிறைவேற்றச் செனட் சபையின் ரிப்பப்ளிக்கன் கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த தீர்மானம் இரண்டு வாக்குகளால் தோல்வியடைந்தது. ஆயினும் இம்முயற்சி தொடருமென ரிப்பப்ளிக்கன் கட்சி அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷினால் முன்வைக்கப்பட்டு கொலராடோ மாநில






செனட்டர் வெயின் அலார்ட் மூலம் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்திற்கு 60 வாக்குகள் தேவையான நிலையில் 48 வாக்குகளே ஆதரவாகக் கிடைத்தன. 50 வாக்குகள் எதிராகக் கிடைத்தன. 12 பேர் வெட்கம் காரணமாக வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் செனட்டர் கெரியும் அவரது உதவி ஜனாதிபதி வேட்பாளர் எட்வேர்ட்டும் இதில் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதித் தேர்தல்கள் அண்மித்து வரும் இக்காலகட்டத்தில் ஜனாதிபதி புஷ் நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறார் என்று அவ்விருவரும் குற்றம் சாட்டியதோடு அந்தப் பிரேரணைக்கு தாம் எதிரானவர்கள் என்றும் குறிப்பிட்டனர். (யே)

# பிலிப்பைன்ஸ் படைகள் திருப்பி அழைக்கப்படுகின்றன

(மணிலா)

எதிர்வரும் ஓகஸ்ட் 20ம் திகதி திருப்பி அழைக்கப்பட இருந்த சுமார் 50 பிலிப்பைன்ஸ் துருப்புக்களையும் அமெரிக்காவின் எதிர்ப்புக்கு மத்தியிலும் அந்நாடு திருப்பி அழைக்கத் தொடங்கியுள்ளது.



பிலிப்பைன்ஸின் வெளிவிவகார அமைச்சின் செயலர் டெலியா அல்பேட்டின் கருத்துப்படி 51 துருப்பினரில் எட்டுப் பேர் ஏற்கனவே ஈராக்கை விட்டு வெளியேறி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

எட்டுப் பிள்ளைகளின் தந்தையான அஞ்செலோ டி லா குரூஸ் விடுவிக்கப்படுவதை உறுதி செய்யும் முகமாகவே இப்பின்வாங்கல் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. பயங்கரவாதிகளுடைய அச்சுறுத்தலுக்கு அடிபணியும் இத்தகைய செயல்கள் கண்டனத்திற்குரியவை என்று அமெரிக்க ராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது. (யே)

## WORLD NEWS உலக தரிசனம்

# கிளெப்னிக்கோவின் உடல் நியூயோர்க் கொண்டுவரப்பட்டது

(மொஸ்கோ)

கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்யாவில் சுட்டுக் கொல்லப்பட்ட ஃபோர்ப்ஸ் (FORBES) சஞ்சிகையின் ரஷ்யநாட்டுக்கான ஆசிரியர் போல் கிளெப்னிக்கோவின் பூதவுடல் இறுதி ஆராதனைகளின் பின் மொஸ்கோவில் இருந்து நியூயோர்கிற்குக் கொண்டு வரப்பட்டது.



போலின் சகோதரர்களான மைக்கலும் பீற்றரும் ரஷ்யாவின் அமெரிக்கத் தூதரகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறினர்.

நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட இந்த இறுதிச் சடங்கு ரஷ்யாவின் பழமைவாத, கிறிஸ்தவ பேராலயத்தில் இடம்பெற்றது. திறந்திருந்த அவரது பேழையினுள் சகோதரர்கள் இறுதி முத்தம் வழங்கினர்.

மிக அண்மையிலேயே ரஷ்யப்பதிப்பில், ஃபோர்ப்ஸ் சஞ்சிகை, அந்நாட்டின் 100 பணக்காரர்களைப் பட்டியல்படுத்தியது. "ஒலிகார்க்" என்று ரஷ்யாவில் அழைக்கப்படும் இப்பிரிவினரில் ஒருவராலேயே இவரது உயிர் காவு கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது. (யே)

# தாயையும் மூன்று குழந்தைகளையும் கொளுத்தியவர் தானும் மாண்டார்

(சீற்றில்- வாஷிங்டன்)

தாயையும் மூன்று குழந்தைகளையும் மண் எண்ணை ஊற்றிக் கொளுத்தியவர் தானும் எண்ணெயை ஊற்றி அதே தீயில் கருகி மாண்ட சம்பவம் ஒன்று அமெரிக்காவின் ரக்கோமா பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.





போதை வஸ்துக்கு அடிமையான ஜெனெறியோ கார்ஷியா எனும் 24 வயது நபர் தனது மனைவியுடன் அடிக்கடி தகராற்றில் ஈடுபட்டு வந்துள்ளார். சம்பவதினத்தன்று மனைவியின் சகோதரியும் கூடவே காரில் பயணம் செய்துள்ளார். காருக்குள் இருவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டிருக்கிறது.

உடனே இருவரையும் ஒரு இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வந்த சகோதரி தன்னுடன் தாயையும் பிள்ளைகளையும் விட்டுச் செல்லுமாறு கேட்டுள்ளார். பிரஸ்தாப நபர் அதற்கு மறுப்புத் தெரிவித்து காரில் அழைத்துச் சென்றுள்ளார். வழியில் மனைவி மீதும் தனது 6மாதம், 1½ வருடம், 2½ வருடக் குழந்தைகள் மீதும் துப்பாக்கி முனையில் எண்ணெயை ஊற்றி தானும் எண்ணெயை ஊற்றித் தீ வைத்துள்ளார்.

இதனால் ஓடிக் கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளானது. இறக்கும் தறுவாயிலும் பிரஸ்தாப நபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். ரக்கோமா நகருக்கருகிலுள்ள பொனிலேக் கிராமத்திற்கருகில் இறந்தவர்களின் ஐந்து உடல்களையும் பொலிஸார் கண்டெடுத்தனர். (யே)

# நாவுக்கரசர் காட்டும் சிவசின்னங்கள்

சைவ சமயாசாரியர் நால்வருள இரண்டாமவராக விளங்குபவர் திருநாவுக்கரசர் ஆவார். இவர் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் திருவா



மூரில் சைவவேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில், புகழனாருக்கும், மாதினியாருக்கும் பிறந்தவர் ஆவார். திலகவதியார் என்பவர் இவருடைய தமக்கையார் திருநாவுக்கரசரின் பிள்ளைத் திருநாமம் மருள்நீக்கியார் என்பதாகும். இளமையிலேயே பெற்றோரைப் பிரிந்தவர். ணதம்பியார் உளராக வேண்டும் என்ற எண்ணத்தினாலே தமக்கையார் மனைத் தவம் புரிந்துவந்தார். இப்படியாக வளர்ந்த திருநாவுக்கரசர் சமண சமயமே உண்மைச் சமயம் என்று எண்ணி அதிலே தருமசேனர் எனும் பெயர் பெற்று பின்னர் சைவ சமயமே உண்மைச் சமயம் என்று உணர்ந்து பின்னர் சைவசமயத்துக்கு மாறினார்.

திருநாவுக்கரசர் சைவசமயத்திலே 4 ஆம் 5 ஆம் 6ஆம் திருமுறைகளை அருளிச் செய்ததோடு, பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார். அந்த வகையிலே நாவுக்கரசர் தாம் அருளிய தேவாரங்களிலே சிவசின்னங்கள் பற்றி எடுத்துக் காட்டியுள்ளார். எனவே நாவுக்கரசர் காட்டும் சிவசின்னங்கள் பற்றி நோக்கலாம். சைவத்தின் சிவசின்னங்கள் என்று கூறப்படுபவை திருநீறு, உருத்திராக்கம் என்பவையாகும். இச் சிவசின்னங்களுள்ளே திருநீறு பற்றி முதலிலே காட்டலாம்.

### திருநீறு

சிவசின்னங்களுள் ஒன்றாகத் திருநீறு திகழ்கின்றது. ஆன்மாக்கள் செய்யும் பாவங்களை நீறாக்கி விடுவதால் நீறு எனவும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய முத்திச் செல்வத்தைத் தருதலினால் விபூதி எனவும், அணவ மலமாதியவைகளைக் கழுவுதலால் சாரம் எனவும், சிறு தெய்வங்களினால் ஏற்படும் துன்பங்களினின்றும் நீக்கிக் காப்பாற்றுதலால் காப்பு எனவும், அறியாமையை நீக்கி ஒளியைத் தருதலால் பசிதம் எனவும், பல பெயர்களைப் பெறுகின்றது.

சிவபெருமானது பரத்துவ உண்மையை விளக்குகின்றதும், ஆன்மாக்களின் மலமாயா கன்ம பாசங்களை அறவே ஒழித்து அவைகளுக்குச் சிவபேற்றை வழங்குகின்றதும் உடற்பிணி போன்ற துன்பங்களை அகற்றி இன்புறுத்துவதும் திருநீறே என்பதைச் சமய குரவர்கள் ஆங்காங்கே தமது அருட் பாடல்களில் எடுத்து காட்டியுள்ளார்கள்.

சமயகுரவர் நால்வரில் பல ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்து உலகியல் அனுபவங்களைத் தமது ஞானானுபவத் திருவாக்கால் வெளிப்படுத்தியவராகிய அப்பரடிகள் தமது தேவாரத்திலே பல இடங்களில் திருநீற்றைக் குறிப்பிட்டு அதன் பெருமையை விளக்கியுள்ளார்.

சமண சமயத்தை விட்டுத் திரு

## வெள்ளி நற்சிந்தனை

வதிகை வீரட்டானப் பெருமானது நல்லருளால் திலகவதியார் திருமுன்னர் வந்த நாவுக்கரசருக்கு தமக்கையாராகிய திலகவதியார் முதற்கண் வழங்கியது திருநீறே ஆகும். இதனை சேக்கிழார்

"**வெள்ளிக் குன்றுடையான் திருநீற்றை அச்செழுத்து ஓதிக் கொடுத்தார்**"

என்று குறிப்பிட்டுள்ளார். அம்மையாரிடமிருந்து பெற்ற திருநீற்றை அப்பரடிகள் அணிந்து கொண்ட முறையை,

"**திருவாளன் திருநீறு திலகவதியாரளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்கு உருவார அணிந்து**"

என்று திருத்தொண்டர் புராணம் கூறும்.

இப்படியாக சமயப் பிரவேசத் தொடக்கத்திலேயே திருநீறு அப்பரடிகளால் போற்றி ஏற்றுக்கொள்ளப்பெற்றது. அதன் சிறப்பை அப்போது அவர் ஓதியருளிய "கூற்றாயினவாறு" என்னுந் தலைப்பை உடைய மூன்றாம் திருப்பாடலில் "பிணிந்தார் பொடி கொண்டு மெய் பூசவல்லீர்" என்று சிவபெருமான் திருநீறு பூசும் வன்மையைக் குறித்துக்காட்டி விளக்கியுள்ளார்.

மேலும் நாவுக்கரசர்

"திருவெண்ணீறணியாத திருவிலூரும் ... அடவி காடே"

என்று பாடியுள்ளார். இதன் மூலம் அப்பர் காட்டும் திருநீறு பற்றி அறிய கூடியதாக இருக்கின்றது.

மற்றும் "திருவாய் பொலிய சிவாய நம என்று நீறணிந்தேன். தருவாய் சிவகதி"

என்று திருப்பாடற் பகுதி சைவத் தெய்வத் திருநீற்றினை அணியும் முறைமையினை உபதேசிப்பதன்றி திருநீற்றினிடத்து நாவுக்கரசருக்கு உள்ள மன உறைப்பினையும் அறிவுறுத்துகின்றது. திருநீற்றை உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் தரித்துக் கொள்ளலாம்.

மேலும் சிவனடியார்களது திருவேடங்களுள் சிறந்ததாகிய திருநீற்றை, யார் அணிந்திருக்கிறார்களோ அவர்களது உள்ளங்களைப் பெருமான் தனது நிலைக்களமாகக் கொள்ளுவாரென்று அப்பரடிகள்

"**வெள்ளை நீறணி மேனியவர்க்கெலாம், உள்ளமாய பிரானார் உறைவிடம், பிள்ளை வெண் பிறை சூடிய சென்னி கள்வன் சேர் கடம்பூர்க்கரக்கோயிலே**"

என்று அருளியிருக்கின்றார்.

### உருத்திராக்கம்

திருநாவுக்கரசர் காட்டும் சிவ சின்னங்களில் உருத்திராக்கமும் ஒன்றாகும். இவன் சிவபெருமானுக்கு ஆட்பட்டவன் என்று ஒருவனை கண்ட மாத்திரத்தே அறிந்து கொள்வதற்கு இரண்டு அடையாளங்கள் உண்டு. அவை உருத்திராக்கம் அணிந்திருத்தலும் திருநீறு பூசியிருத்தலும் ஆகும். இதனையே சைவநெறி குறள் ஆசிரியர் "பரமசிவன் மலன் பக்தர்க்கும் சின்னம், உரு உடலில் கண்டிகையுநீறும்" எனும் குறளில் உருத்திராக்கத்தை முன்னரும் திருநீற்றை பின்னரும் வைத்துள்ளனர்.

உருத்திராக்கம் பற்றி பொதுவாகப் பார்க்கின் உருத்திராக்கம் என்பது உருத்திரனின் கண் எனப் பொருள்படும். இது பற்றிய புராண கதை ஒன்று உண்டு. முன்னொரு காலத்தில் திரிபுர அசுரர், தேவர்களுக்கு துன்பம் செய்து வந்தார்கள். தேவர்கள் அவர்களது துன்பத்தைத் தாங்க முடியாமல் சிவனிடம் சென்று முறையிட்டுப் புலம்பினார்கள். அவ்வேளை எம்பெருமானின் கண்களினின்றும் பொழிந்த நீரில் தோன்றிய மணியே உருத்திராக்க மணி என கூறப்படுகின்றது. திருவருட் பேற்றின் அறிகுறியாக இது விளங்குகின்றது.

உருத்திராக்க மணிகள் ஒரு முகம் பதினாறு முகம் வரை உள்ளன. கண்டிகை, அக்குமணி, தாழ்வடம், திருவடையாளம், தெய்வமாமணி, புனிதமாமணி, விழிமணி எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படுவதுண்டு. உருத்திராக்கத்தை எல்லோரும் அணிய முடியாது. மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராய் ஆசாரமுடையவராய் உள்ளவர்களே அணிய வேண்டும் என்று கூறப்படுகின்றது.

இப்படியான சிவசின்னமாகிய உருத்திராக்கம் பற்றி நாவுக்கரசரும் எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது இறைவனே உருத்திராக்கத்தை அணிந்துள்ளான் என்று கூறியுள்ளார்.

"**அக்காரணி வட மாகத்தர் நாகத்தர் புக்கார் புகலூரப் புரி சடையாரே**"

இதன் மூலமாக திருப்புகலூர்ச் சடைப்பெருமான். அக்கு (உருத்திராக்கம்) நிறைந்த மாலையைப் பூண்ட மார்பர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வேறோரிடத்தில்

"**அக்கு மாமையும் பூண்டன லேந்தியில் ·**
**புக்குப் பல்லவி தேரும் புராணனை**
**நக்கு நீர்கள் நரகம் புகேன் மினோ**
**தொக்க வானவ ராற்றொழு வானையே**"

என்ற பாடலூடே அக்க மணிகளும் அமையும் அணிந்தவர் என்பது புலப்படும். அடுத்து

"**கண்டி பூண்டு கபாலங்கைக் கொண்டிலர்**
**விண்டவான் சங்கம் விம்பவாய் வைத்திலர்**

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
செல்வி தயாளினி நவநீத கிருஷ்ணன்

**அண்ட மூர்த்தி யழல் நிற வண்ணனைக்**
**கொண்டிக் காணலுற் நாரங்கிருவரே**"

திருமாலும், பிரமனும் ஆகிய இருவரும் கண்டி அணிந்து கபாலம் கையிற் கொள்ளாதவராய், வெண்மை விரித்த சங்கம் விம்மு மாறு வாயில் வைத்தூதாதவராய் அண்ட மூர்த்தியாகிய தீ நிற வண்ணனை மண்ணில் கிண்டியும், விண்ணில் பறந்தும் காணலுற்றனர்.

மேலும் "கண்டியிற் பட்ட கழுத்துடையீர்கரி காட்டிலிட்ட"

இங்கே கண்டி என்பது உருத்திராக்கமே ஆகும்.

எனவே நாவுக்கரசர் சைவசமய சிவசின்னங்களாகிய திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் தமது தேவாரப்பாடல்களில் பல இடங்களில் காட்டியுள்ளமையை அறியக்கூடியதாக இருக்கின்றது. □

---

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நிர்வாணச்சோதனை
## இந்திய அரசாங்கத்திடம் அமெரிக்கா மன்னிப்புக் கோரியது

(லண்டன்)

இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்ணான்டோ கடந்த வருடம் அமெரிக்காவுக்குச் சென்றபோது அமெரிக்க விமான நிலையத்தில் வைத்து நிர்வாண சோதனைக்கு உட்படுத்தியமை குறித்து அமெரிக்கா மன்னிப்புக் கோரியுள்ளது. பாதுகாப்பு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகள் உரிய முறையில் விதிகளைக் கடைப்பிடிக்கவில்லை எனவும் இதனாலேயே இந்த அசௌகரியம் நேர்ந்தது எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

பெர்னாண்டஸுக்கு ஏற்பட்ட அவமானத்தையிட்டு கவலை அடைவதாகவும், சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமெரிக்காவுக்கு இருதடவை பயணம் மேற் கொணடிருந்தார். இவ்விரு பயணத்தின் போதும் அமெரிக்கக் குடியுரிமை அதிகாரிகளினால் நிர்வாண சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன் விளைவாக இனிமேல் ஒருபோதும் தான் அமெரிக்காவுக்கு செல்லப்போவதில்லை என ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிராம அலுவலர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி நெறி நாளையும் நாளை மறுதினமும் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (நியாப்) நிதி உதவியுடன் இடம்பெறவுள்ள இந்த பயிற்சி நெறியில மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, உதவித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன், யாழ்.செயலக உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன், பிரதம எழுதுநர் ம.கதிர்காமநாதன் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர். (உ-19)

## இடைவிலகிய மாணவர்களை இணைத்துக்கொள்ள முயற்சி

(அம்பாறை)

அம்பாறை, அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் யுத்த சூழல், வறுமை போன்ற காரணங்களால் பாடசாலைக்குச் செல்லாதோர் மற்றும் கல்வியை இடைநிறுத்தியோர் என 600 பேர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவ் 600 பேரையும் மீண்டும் கல்வியில் இணைத்துக்கொள்ள யுனிசெவ் நிறுவனம், கல்வித் திணைக்களம், முறைசாராக் கல்விப் பிரிவு ஆகியன இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அககரைப்பற்று வலயத்திலுள்ள கல்விக் கோட்டங்களில், புறக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில் ஆகிய கோட்டங்களிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வியிலிருந்து இடைவிலகியுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-61,8)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் கல்லூரியின் சிவபரதசுந்தரம் மண்டபத்தில் அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிலே வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதமவிருந்தினராகவும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைப்பாறிய மாகாணக்கல்விப்பணிப்பாளர் கே.கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-52)

---

## முன்பள்ளிக் கண்காட்சி

(பருத்தித்துறை)

வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளிக்கல்விமேம்பாட்டு நிலைய வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களின் முன்பள்ளிக் கண்காட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இரு நாட்கள் நடைபெற்றன. இக்கண்காட்சியில் வடமராட்சிப் பிரதேசத்தைத் சேர்ந்த 115 முன்பள்ளிகள் பங்குபற்றின.

வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் பணிப்பாளர் ரீ.சத்தியசீலன் தலைமையில், இடம் பெற்ற இந்த நிகழ்வில் கண்காட்சியை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா தமிழீழ தேசியப் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவநேசன், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆகியோர் கண்காட்சியைத் திறந்து வைத்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் கே. கணேசலிங்கம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சுப்பிரமணியம் உட்பட இன்னும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (உ-52)

## இலங்கை - நேபாள உறவில் விருத்தி

(கொழும்பு)

இலங்கையுடன் சுற்றுலாத் துறை உறவுகளை அபிவிருத்தி செய்வதற்கு நேபாள அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையிலிருந்து நேபாளம் செல்லும் யாத்திரிகர்களுக்கு மேலதிக வசதிகளை வழங்குவதற்கும் நேபாளத்திற்கும் கொழும்புக்கும் இடையில் நேரடி விமானசேவையை நடத்துவதற்கும் நேபாள அரசு துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, சார்க் நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு நேபாள அரசு இலவச விசாக்களை வழங்குவதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

## நட்ட ஈட்டை அதிகரிப்பது குறித்து கூடிய கவனம்

(கொழும்பு)

அரச சேவையில் இருக்கும் போது உயிரிழக்கும் அல்லது அங்கவீனமடைவோர் சம்பந்தமாக வழங்க்ப்படும் நட்ட ஈட்டுத் தொகையை அதிகரிப்பது பற்றி தொழில அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது என தொழில் அமைச்சர் அதாவுட செனிவிரத்தின தெரிவித்துள்ளார்.

அரச சேவையில் இருக்கும் போது ஒருவர் உயிரிழந்தால் அல்லது அவர் அங்கவீனமடைந்தால் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அவருக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நிலையத் தலைவர் எஸ்.தம்பிராசா தலைமையில் ஸ்ரீ வண் வைத்திலிங்கம் வித்தியாசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா, சர்வோதய மாவட்ட இணைப்பாளர் ஸ்ரீ மனோகரன் ஆகியோரும் கலந்த கொள்ளவுள்ளனர். (உ)

# கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டம்

## தமிழக அரசுக்கு மத்திய அரசு கடிதம்

(புதுடில்லி)

குடிநீர் பற்றாக்குறை நிலவும் கடலோர நகரங்களில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்துக்கான உத்தேச செயல்வடிவத்தை அனுப்புமாறு தமிழக அரசுக்கு மத்திய நகர்ப்புற மற்றும் வறுமையொழிப்பு அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது.

இத் தகவலை மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ரகுவம்ச பிரசாத்சிங் மாநிலங்களவையில் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.


சென்னையில் நிலவும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறைக்குத் தீர்வு காணக் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயற்படுத்தப்படுமென காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்சப் பொது செயல் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இதேபோல, தமிழகத்தில் குடிநீர் பற்றாக்குறை நிலவும் கடலோர நகரங்களிலும் இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான உத்தேச செயல்வடிவத்தை அனுப்புமாறு தமிழக அரசுக்கு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வறுமையொழிப்பு அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது.

ஆந்திரா, ஓரிஸா ஆகிய மாநிலங்களிலும் கடலோர நகரங்கள் பலவற்றில் கடும் குடிநீர்ப் பற்றாக் குறை நிலவிவருகிறது.

அந் நகரங்களிலும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான உத்தேச செயல்வடிவத்தை அனுப்புமாறு அம்மாநில அரசுகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (து)





தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதிக்கான வட்டி விகிதம் குறித்த ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார் தொழிலாளர் துறை அமைச்சர் சீஸ்ராம் ஓலா.

# சாராய வேட்டையில் 3500 பேர் கைது

(திருவண்ணாமலை)

வடக்கு மண்டல பொலிஸ் சரகத்திலுள்ள 7 மாவட்டங்களில் கள்ளச் சாராய ஒழிப்பில் ஈடுபடுத்தப்பட்ட பொலிஸார் 3500க்கு மேற்பட்ட கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், விற்பனை செய்வோர் ஆகியவர்களைக் கைது செய்ததுடன் 50 இலட்சம் ரூபா பெறுமதியான கள்ளச்சாராயம், ஊறல் முதலியவற்றைப் பறிமுதல் செய்து அழித்தனர்.

இது குறித்து வடக்கு மண்டல பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஜாங்கிட் செய்தியாளர்களிடம் பேசிய போது, 15 நாட்களுக்குள் வடக்கு மண்டலத்துக்குட்பட்ட திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கள்ளச் சாராயத்தை முற்றாக ஒழிக்க வேண்டுமென பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதால் விபத்து, திருட்டு, வழிப்பறி, தகராறுகள் குறையும் என்றும் கூறினார்.

கள்ளச் சாராயத்தை முற்றாக ஒழித்த பின் அத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் செயற்படுத்தப்படுமென்றும் மாவட்ட ஆட்சியர், வங்கி, மற்றும் தன்னார்வக் குழுக்களுடன் பேசி இதற்கான ஏற்பாடு செய்யப்படுமென்றும் தெரிவித்தார். (து)

## ஆளுநர்கள் பதவி நீக்கத்துக்கு காழ்ப்புணர்வு காரணமல்ல

இந்தியாவின் வட மாநிலங்கள் நான்கில் ஆளுநர்களை நீக்குவதாக அரசு எடுத்த முடிவை முன்னாள் பிரதமர் வாஜ்பாய் விமர்சித்திருக்கிறார்.

அரசின் இந்த நடவடிக்கை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்றும் ஒரு தவறும் செய்யாத நிலையிலும் ஆளுநர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தமது தொகுதியான லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேச ஆளுநர் விஷ்ணுகாந்த் சாஸ்திரி, குஜராத் ஆளுநர் கைலாசபதி மிஸ்ரா, ஹரியானாவின் பாபு பரமானந்தா, கோவாவின் பிரபரநாத் ஸ்தானி ஆகியோர் கடந்த புதன்கிழமை பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

இதனிடையே ஆளுநர்களை அகற்றும் முடிவு எடுக்கப்பட்டதற்கு யார் மீதுமான காழ்ப்புணர்வும் காரணமல்ல; மாநில அரசுகள் சுமுகமாக நடப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கம் என்று இந்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் கூறியிருக்கிறார். (து)

# அ. தி. மு. க. வினர் பெயர்களை அனுமதியின்றி பயன்படுத்தினார்

(ஸ்ரீவில்லிப்புத்தூர்)

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர மன்றத் தலைவர் தாமரைக்கனி நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்துக்கான விளம்பரங்களில் அ.தி.மு.க.வினர் பெயர்களைப் பயன்படுத்தியதாக ஸ்ரீவில்லிப்புத்தூர் பொலிஸார் தொடர்ந்த வழக்கில் தாமரைக்கனிக்கு நடுவர் நீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கியுள்ளது.

ஸ்ரீவில்லிப்புத்தூர் குடிநீர் திட்டத்தை விரைவில் நிறைவேற்றக் கோரி கடந்த சனிக்கிழமை தாமரைக்கனி உண்ணாவிரதம் இருந்தார்.

இதற்காக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், விளம்பரங்களில் மேற்படி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இன்பத் தமிழன் உட்பட பல அ.தி.மு.க.வினர் வாழ்த்துரை வழங்குவார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமைச்சர் இன்பத் தமிழன் மற்றும் அ.தி.மு.க.வினருக்குக் கெட்ட பேர் உண்டாகும் விதத்தில் அவர்களது ஒப்புதல் இல்லாம் அவர்களது பெயர்கள் விளம்பரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தாமரைக்கனி மீது வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ் வழக்கை விசாரித்த ஸ்ரீ வில்லிப்புத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தாமரைக்கனிக்கு முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது.

அமைச்சர் இன்பத்தமிழன் தாமரைக்கனியின் மகன் என்பதும், கடந்த சட்டமன்றத் தேர்தலில் தாமரைக்கனியை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

# இந்தியச் செய்திகள்



பவானி நதியின் பிறப்பிடமான நீலகிரி மலையில் உள்ள மேல் பவானி அணைக்கட்டுப்·பகுதியில் பெய்து வரும் பருவ மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. மலைகளுக்கு நடுவே ஓடும் நதியின் அழகைக்காண அதிகாலை வேளையில் எட்டிப்பார்க்கும் சூரிய ஒளி.

# தமிழகத்தில் 500 தொடக்கப்பள்ளிகள் மூடல்

## மத்திய அரசுக்கு முறையிட முடிவு

(கடலூர்)

தமிழக தொடக்கப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிக்காததால் 500 பள்ளிகள் மூடப்பட்டுவிட்டன. மேலும் பல பள்ளிகளை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய அரசிடம் புகார் செய்ய 150 பேர் கொண்ட ஆசிரியர் குழுவொன்று டில்லி செல்லவுள்ளது என தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அறிவித்துள்ளது.

தமிழகத்திலுள்ள அரசு, மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 1993 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 93 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரிந்தனர்.


தமிழக அரசு மாணவ - ஆசிரிய விகிதத்தைக் குறைத்ததால் 4 ஆண்டுகளில் 70 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் குறைந்தன.

தற்போது 35 ஆயிரம் ஆசிரிய பணியிடங்களும் 1500 தலைமை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படாமல் உள்ளன.

கிராமப்புறங்களில் புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு புதிய ஆசிரியர்களை நியமிக்காமல் பக்கத்துப் பள்ளிகளிலிருந்து ஆசிரியர்களை நியமித்ததால் கற்பித்தல் சீர்குலைந்தது. இதனால் 500 பள்ளிகள் மூடப்பட்டன.

9 ஆவது 10 ஆவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இப் பள்ளிகளுக்கு மத்திய அரசு ஒதுக்கிய நிதியை முறையாகப் பயன்படுத்தியிருந்தால் மாணவர்கள் கல்விப் பாதிப்பும் 500 பள்ளிகளை மூட வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது.

தமிழகத்தில் எழுந்துள்ள இப் பிரச்சினையை மத்திய கல்வி அமைச்சர், மற்றும் நிதி அமைச்சருக்கு நேரில் முறையிட தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் நிர்வாகிகள் 150 பேரைக் கொண்ட குழு இந்த வாரம் புதுடில்லி செல்லவிருக்கிறது. (து)



வணிகம் மற்றும் தொழிற்றுறை அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், பங்களாதேஷின் முதலீட்டு கழகத்தின் தலைவர் மஹமுதுர் ரஹ்மானை புதுடில்லியில் சந்தித்துப் பேசினார்.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

# General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**தமிழ்மொழியும் இலக்கியமும் II**

ஆக்கம் : *சி. சிவகாந்தினி* (B.A Hons)
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
சுன்னாகம்.

மணி - 2

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
இவ் வினாக்களுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**

(அ) சிந்தனை ஆற்றலே மனிதனிடத்துள்ள மாபெருஞ் சக்தியாகும். அதனால் அவன் விலங்கு நிலையினின்றும் உயர்ந்து நாகரிகமடைந்தான். கல்வி மனிதன் பூரண வளர்ச்சியடைவதற்கு பெருந்துணையாக விளங்குவது. எனவே எண்ணும் எழுத்தும் கண்போலப் போற்றப்படுபவை என்பது பற்றிய ஒரு விளக்கக் கட்டுரை.

(ஆ) 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்' என்பவர். மூட நம்பிக்கைகள் மனித வளர்ச்சிக்கு எச்சந்தர்ப்பத்திலும் உதவாதன. இத்தகைய மூட நம்பிக்கைகளை சமூகத்தில் இருந்து எவ்வாறு நீக்கலாம் என்பது தொடர்பான இருவரின் உரையாடல்.

(இ) நாம் வாழும் சூழல் பல்வேறு காரணங்களால் மாசுபடுத்தப்படுகின்றது. இதனால் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன. சூழலைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். எனவே 'சூழல் மாசடையாது பாதுகாத்தல்' என்பதனை வலியுறுத்தி உலக சுற்றாடல் தினத்தில் நீங்கள் நிகழ்த்தும் சொற்பொழிவு.

(ஈ) வீதியால் நீங்கள் சென்றுகொண்டிருக்கும்போது, அங்கு நிகழ்ந்த விபத்துக் காட்சியையும் அதனால் ஏற்பட்ட மனத்தாக்கத்தையும் உள்ளடக்கிய ஒரு விவரணம்.

(உ) 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்ற கருவை மையமாகக் கொண்ட ஒரு கற்பனைச் சிறுகதை. (30 புள்ளிகள்)

2.
கீழே தரப்பட்டுள்ள (அ), (ஆ), (இ), (ஈ) எனும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை 15-20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறுவேறாக எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

(அ) இயற்கையாக ஒலிகளை எழுப்புகின்ற ஆற்றல் எல்லா உயிரினங்களுக்கும் உண்டு. புவியில் வாழும் ஒவ்வோர் உயிரினக் கூட்டங்களும் ஏதோ ஒரு வகையில் ஒலிகளை எழுப்பி தம்முடைய தொடர்பாடல் நிகழ்வுகளைக் கையாளுகின்றன. வாழும் விலங்குகளில் மனித இனத்தின் சாதனைகளோ பல. ஆயினும் அவ்வெல்லா சாதனைகளுக்கும் அடிப்படையாய் உதவுவது மொழியே. 'மொழி மனித நாகரிகத்துடன் நாகரிகமாக வளர்ந்து வருவது. மேற்சொன்னவாறு ஏனைய விலங்குகள் ஒலியை மட்டும் எழுப்பியே தம்முள் தொடர்பாடலைச் செய்கின்றன. ஆனால், மனிதனோ ஒலி வடிவத்தால் மட்டுமன்றி வரிவடிவத்தினாலும் ஏனையவர்களோடு தொடர்பு கொள்கின்றான்.

(ஆ) மாணவர்களுக்கு விளையாட்டு, தேகப்பயிற்சி போன்றவை முக்கியத்துவம் வாய்ந்தவை. பலதரப்பட்ட மனஉளைச்சல்களை இவற்றின் மூலம் வராமல் தடுக்கலாம். வந்தவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். ஆனால், இவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை. மாணவர்களைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள் நல்ல நோக்குடன் தான் என்றாலும் அதிக புள்ளிகள் எடுப்பதற்கு அளவுக்கதிமாக நெருக்குகின்றனர். இந்த நெருக்கீடுகள் அனைத்தும் சேர்ந்து இளம் சமுதாயத்தினரை சாதாரண மனநிலையில் இருந்து தளம்பி மனவடு எனும் பாழ்கிணற்றில் தள்ளி விடுகின்றது.

(இ) இசைக்கு மனிதன் மட்டுமா மயங்குகின்றான்? உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுமே இசையில் லயித்து விடுகின்றன. கல்வானி என்கின்ற மேலை நாட்டு விஞ்ஞானி கண்டுபிடித்த கல்வனோமானியைக் கொண்ட தாவரங்களும் இசையை இரசிக்கின்றன என இந்திய இசை ஆராய்ச்சி நிபுணர்கள் நிறுவியுள்ளனர். உலக உயிர்கள் அனைத்தையும் இன்பமாக வைத்திருப்பதற்கு இசை உதவுகின்றது. இசையால் ஒருவனை அழுவிக்க முடியும். மகிழ்விக்க முடியும், கோபத்தைப் போக்கி சாந்தமாக்க முடியும், குழம்பிப்போன மனதுக்கு நிம்மதி கொடுக்க முடியும். இசையை விரும்பிய சிவன் தன் கரத்திலே உடுக்கினை நிரந்தரமாகவே வைத்து நாளும் பொழுதும் அவ்விசை இன்பத்திலே திளைத்திருக்கின்றார். கண்ணபிரான் புல்லாங்குழல் இசையிலும், சரஸ்வதித் தாய் வீணை நாதத்திலும் ரசித்திருக்கின்றனர். எனவே இசைக்கு வசமாகாத இதயமே இல்லை.

(ஈ) கிராமங்களே நாட்டின் உயிர்நாடியாகத் திகழ்பவை. உணவு, உடை, உறையுள் ஆகிய அத்தியாவசிய மனித தேவைகளைப் பூர்த்தி செய்பவை. அதனால் அவற்றினை ஆக்கித்தரும் கிராமங்களின் முன்னேற்றமே நாட்டு முன்னேற்றமாக அமைகிறது. கிராம மக்கள் இயல்பாகவே எளிமையை விரும்புபவர்கள். கடின உழைப்பாளிகள். பழமையிற் பெருவிருப்பம் கொண்டவர்கள். மூடநம்பிக்கைகள் பல உடையவர்கள், உண்மையான சிக்கன வாழ்வு அதுவென அறியாதவர்கள். அதனாலே சீரிய வாழ்வு வாழத் தெரியாதவர்கள். இத்தகைய கிராமமக்களைச் சீர்திருத்த அன்பும், பொறுமையும், தியாக மனப்பான்மையும் கொண்ட உழைப்பே பயன்படும்.
(20 புள்ளிகள்)

3.
பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இலக்கியத்தைப் படிப்பதன் மூலம் உயர்ந்த எண்ணங்களையும், குறிக்கோள்களையும் நாம் அறிய முடிகிறது. எல்லோரும் எம்முடைய உறவினர்கள், எல்லா ஊர்களும் எம்முடைய ஊர்கள் என்று உயர்ந்த கோட்பாட்டை புறநானூற்றுப் புலவன் கூறுகிறான். இத்தகைய உயர்ந்த கோட்பாட்டை நாம் நடைமுறைப்படுத்த இன்னொரு உண்மையினை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். அதுதான் எமக்கு ஏற்படும். நன்மையோ, தீமையோ பிறர் தருவதனாலே வருவதல்ல என்பதாகும்.

"யாதுமூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

இது எம் வாழ்க்கையை நெறிப்படுத்த உதவும் கோட்பாடாகும். பட்டறிவினாலே கண்ட உண்மையாகும். அறிவியல் உண்மையை மட்டும் புலப்படுத்தும். ஆனால், இலக்கியமோ உண்மைகளைப் புலப்படுத்தும். சமூகத்தைச் செம்மைப்படுத்த வழிகள் கூறும். ஆழகியலுணர்வினைப் புலப்படுத்தும். இலக் கிய ஆசிரியனும், அறிவியலறிஞனும் ஒரே தளத்தில் நின்றே புறப்படுகின்றனர். இருவரும் இயற்கையை அவதானிப்பதிலே ஒன்றுபடுகின்றனர். ஆனால், அந்த அவதானிப்பூடாகக் கண்ட உண்மையினைக் கூறுவதிலே இருவரும் வேறு படுகின்றனர்.

(அ) எமது வாழ்வை நெறிப்படுத்த உதவும் கோட்பாடு எது எனக் கூறப்படுகிறது?
(ஆ) "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பதன் பொருள் யாது?
(இ) இலக்கியக் கல்வியின் பயன்பற்றி விளக்குக.
(ஈ) அறிவியலுக்கும், இலக்கியத்திற்குமிடையேயுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுக.
(உ) அறிவியலறிஞன் - இலக்கிய ஆசிரியன் ஒன்றுபடும் இடத்தினைத் தருக.
(ஊ) பட்டறிவு என்பதன் பொருள் யாது?
(எ) இவ் உரைநடைப் பகுதி பற்றி யாது கருதுகிறீர்?
(15 புள்ளிகள்)

4) கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்வதற்கு உங்கள் பாடசாலை தீர்மானித்துள்ளது. அதற்கான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அதிபர் பணித்துள்ளார். அதற்கேற்ப பின்வரும் விடயங்களை கருத்திற்கொண்டு 100 சொற்கள் கொண்ட அறிக்கையொன்றை தயாரிக்க.
அ. ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்தாலோசித்தல்.
ஆ. சுற்றுலா ஒழுங்குகளை தீர்மானித்தல்
இ. கல்விச் சுற்றுலா பற்றிய விளக்கம்
ஈ. சுற்றுலா மேற்கொள்ளும் காலம்
(15 புள்ளிகள்)

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

1,2,3,4 ஆம் வினாக்களுக்கும் 5 தொடக்கம் 7வரையுள்ள வினாக்களுள் ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

1. அ) "எனக்கென்ன கேடு வந்துட்டுதா? இந்த உலகத்தில அறுபது வருசம் சீவியம் செஞ்சிட்டன்! ஒன்னைப் போல குழந்தையா நான்?"
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) இவ்வாறு கூறுவதற்கான காரணம் யாது?
   (iv) "இந்த உலகத்தில் அறுபது வருசம் சீவியம் செஞ்சிட்டன்" என்பதைத் திருத்தமான மொழிநடையில் எழுதுக.

ஆ) "இணையில்லாதவரை ஈண்ட அமுது செய்விப்போம்"
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) "இணையில்லாதார்" என்பதன் பொருள் யாது?
   (iv) இக்கூற்றின் பின் நிகழ்ந்தது யாது?

இ) "பற்றுமின் கடிதின்; நெடும் பார்மிசை எற்றுமின்;"
   (i) இவ்வாறு கூறியவன் யார்?
   (ii) இக்கூற்றில் வெளிப்பட்டுள்ள உணர்ச்சி யாது?
   (iii) பற்றுமின், எற்றுமின் என்பவற்றின் பொருள் யாது?
   (iv) எச்சந்தர்ப்பத்தில் இக்கூற்றுக் கூறப்பட்டது?

ஈ) "அறிந்தும் இலன் இவ்வூரில் வழங்கும் நீதி; அருவினையேன் ஆருமிலி ; அறவும் பாவி; மறிந்த மகன் தனைச் சுட நான் வந்தேன்"
   (i) இக்கூற்று யாரால் கூறப்பட்டது? (ii) யாருக்குக் கூறப்பட்டது?
   (iii) அருவினை என்பதன் பொருள் எழுதுக.
   (iv) இக்கூற்றில் வெளிப்பட்டிருக்கும் உணர்வு யாது?

உ) "நீ சொல்லுற கணக்கைப் பார்த்தா நாற்பது என்ன ஐம்பது ரூபா கூட பத்தாது போ?"
   (i) இவ்வாறு மனதுள் கூறிக்கொண்டவர் யார்?
   (ii) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   (iii) இக்கூற்றை திருத்தமான மொழி நடையில் தருக.
   (iv) பத்தாது என்பதன் எதிர்க்கருத்து யாது?
(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

(அ) சாகவும் மனமில்லைத் தண்டணைக் கெதிர்
போகவும் துணிவில்லைப் புறத்து ளாரைப் போல்
ஏகவும் புகலிலை யீடு செய்வோர்
பாகவும் பலமிலைப் பதைக்கின் றேனென்றான்

(ஆ) "உந்தை என் துணைவன் அன்றே;
ஓங்'கு' அறம் சான்றும் உண்டால்;
நிந்தனை இதன்மேல் உண்டோ,
நீ அவன் தூத னானால்?
தந்தனன் நினக்கு யானே
வானரத் தலைமை; தாழா
வந்தனை; நன்று செய்தாய்
என்னுடைய மைந்த" என்றான்

(இ) முறித்தலை அடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமும் கொள்ள
வறுத்தபின் அரிசியாக்கி வாக்கிய உலையிற் பெய்து
வெறுப்பில் இன் அடிசில் ஆக்கி மேம்படு கற்பின் மிக்கார்
"கறிக்கினி என் செய்கோம்!" என் றிறைஞ்சினார் கணவனாரை

(ஈ) ஓடினாள்; உள்ளமெல்லாம் உருகினாள்; கருகிமேனி
வாடினாள்; விறகுவைத்த வடத்தினுக்'கு' அருகே வந்தாள்
நாடினாள்; கழுகும் பேயும் நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பன் குமரனைச் சென்று கண்டாள்

(உ) எனக்குறுந் தகுதி தந்த வியல்புறும் வல்ல நாயன்
றனக்குறும் வண்மை யெம்மோர் சாற்றுதற் கரிய காண்டும்
நினக்குறுஞ் சேனையோடு நெடுங்களத் தமதின் வெம்போர்
முனைத்திறம் புரியி னென்றார் மூவுல குயர்த்துங் கோமான்
(20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.
(அ) அரிச்சந்திர புராணத்தில் மகனை இழந்த சந்திரமதி வருந்தும் நிலையினை விளக்குக.
(ஆ) சேக்கிழார் கையாண்டுள்ள உவமைச் சிறப்பினை உவமைநயம் பகுதியினூடாக ஆராய்க.
(இ) சகீனாவின் குணவியல்புக்ள் சித்தரிக்கப்பட்டுள்ள வகையினை விவரிக்க.
(14புள்ளிகள்)

4. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக.

(அ) ஆத்தும விசாரிக்கு குரு செய்கின்ற உபதேசத்தைத் தொகுத்துத் தருக.
(ஆ) மாறனாரின் பக்திச் சிறப்பு வெளிப்பட்டிருக்கும் தன்மையை ஆராய்க.
(இ) "வள்ளுவரும் பாரதியாரும்" எனும் பகுதியில் திருவள்ளுவர் கூறிய அரசியல் உண்மைகள் பற்றி விளக்குக. (16 புள்ளிகள்)

5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடைதருக.

5. இராவணன் இனிப் போர் செய்ய வரமாட்டான் என்பதற்கு இராமன் காட்டியஆதாரங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

6.(அ)கல்லாதவன் கற்றகவி எதற்கு உவமையாகக் கூறப்படுகிறது?
(ஆ)நல்லவருக்குச் செய்த உதவி எத்தகைய தன்மையுடையது?
(இ)நெல்லுக்கிறைத்த நீர்,புல்லுக்கும் பயன்கொடுக்கும் என்பது எதற்கு எடுத்துக் கூறப்படுகிறது? (10 புள்ளிகள்)

7.பின்வருவன பற்றி விவரமாக எழுதுக.
(அ)'அறத்தால் வருவதே இன்பம்; மற்றெல்லாம் புறத்த புகழும் இல; என்பதை மகாகவி பாரதியார் எடுத்துரைக்கும் முறை
(ஆ)கதீஜா நாயகி அவர்களின் பெருமைகளைப் பற்றி பெருமானார் குறிப்பிட்டவை
(10 புள்ளிகள்)

நாளை சமூகக்கல்வியும் வரலாறுக்குமான பகுதி - I வினாக்கள் வெளிவரும்.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

## கனவில் முருகன் திருவிளையாடல்

தொடர் இல: 9



நாங்கள் வயலூருக்குச் சென்ற அந்த இரவு திருச்சிராப் பள்ளியில் வாழும் வயலூர் அறங்காவலர் சிறந்த அன்பர் திரு.தோட்டா இராதாகிருஷ்ணன் செட்டியாருடைய கனவில் முருகப்பெருமான் காவிஉடை உடுத்து, உருத்ராஷ மாலை அணிந்து காட்சியளித்தார். அவர் கனவில் முருகனைக் கண்டு வணங்கினார். முருகன் ஏண்டா! என் பக்தனிடமிருந்து நீ எட்டு அணா வாங்கிக் கொண்டனையே! அதனால் வயலூர் கோபுரம் கட்டி முடியுமா?'' என்று உரத்த குரலில் அதட்டிக் கேட்டார். அவர் பதறிக் கண் விழித்துக் கொண்டார். காலையில் எழுந்து நீராடி பட்டாடை உடுத்துக் கொண்டு வயலூருக்குச் புறப்பட்டார். அந்தக் காலத்தில் கார், பஸ் வசதிகள் இல்லை. மாட்டு வண்டியில் ஏறி வயலூருக்குச் சென்றார். முருகப் பெருமானை வழிபாடு செய்து விட்டு நேற்று இங்கு யார் வந்தது?'' என்று கோயில் பேஷ் காரைக் கேட்டார். சென்னை யிலிருந்து திருப்புகழ்ச் சபையார்கள் வந்து விட்டுப் போனார்கள் என்று அவர் சொன்னார்.

அப்பொழுது திருச்சிராப்பள்ளியில் என்னுடைய பெயர் பிரசித்தியாகாத காலம். செட்டியார் ''வந்தவர்கள் எட்டணா கொடுத்தார்களா? '' என்று அவர்களைக் கேட்டார் ''தரவில்லை'' என்று எல்லோரும் கூறிவிட்டார்கள். அர்ச்சகச் சிறுவரைக் கூப்பிட்டு நேற்று வந்த வர்கள். உன்னிடம் எட்டணா கொடுத்தார்களா!'' என்று கேட்டார். அவர் ஆம்! என்னிடம் எட்டு அணா கொடுத்தார்கள்'' என்று சொன்னார்.

செட்டியார் பலமுறை ராஜகோபுரம் கட்டுவதற்கு முயற்சித்து முடியாமல் இருந்தது. அவர் குருக்களிடமிருந்து அந்த எட்டணாவை வாங்கி எனக்கு மணியாடர் செய்து விட்டார். மணியாடர் கூப்பனில் முருகன் உத்தரவுப்படி இதை அனுப்பியிருக்கிறேன். தயவு செய்து பெற்றுக் கொள்ளவும். இப்படிக்கு தோட்டா. ராதாகிருஷ்ணன்செட்டியார்'' என்று இருந்தது.

நான் சென்னையில் சேர்ந்ததும் மணியாடரும் சேர்ந்தது. மணியாடர் கூப்பனில் எழுதியிருந்த வாசகங்கள் எனக்கு ஒன்று விளங்கவில்லை. மணியாடரை வாங்கி வைத்துக் கொண்டேன். 8அணா மணியாடரா? முருகன் உத்ரவு என்றால் என்ன? இது ஒன்றும் புரியவில்லையே! என்று சிந்தனை செய்து கொண்டே இருந்தேன். மூன்று மாதங்களுக்குப் பிறகு திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையிலிருந்து சொற்பொழிவு செய்ய எனக்கு அழைப்பு வந்தது. நான் திருச்சிராப்பள்ளிக்கு விரிவுரை செய்யச் சென்றிருந்தேன். அங்கே என்னுடைய ஆப்த நண்பர் முனிசிபல் மனேஜர் வி.எஸ்.லோகநாதப்பிள்ளை வீட்டில் தங்கியிருந்தேன். மலைக் கோயிலில் மகாமணி வைத்த உலகநாதன் செட்டியாரும் தோட்டா ராதாகிருஷ்ணன் செட்டியாரும் அங்கு வந்து என்னை வயலூருக்கு அழைத் துச் சென்றார்கள். சுவாமி தரிசினம்-செய்தபின் கோவிலுக்கு எதிரில் இருக்கின்ற இச் சிரமத்தின் கீழ் என்னை இருக்கச் செய்து இளநீர் கொடுத்து தோட்டா ராதாகிருஷ் ணன் செட்டியார் (அறங்காவலர்) என்னைப் பார்த்துக் கூறுவாராயினார்.

சுவாமி நீங்கள் மூன்று மாதங்களுக்கு முன் வயலூருக்கு வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு குருக்கள் தம்பியிடம் 8 அணா கொடுத்துவிட்டுச் சென்றீர்கள்.

அன்று இரவு முருகப் பெருமான் என் கனவில் காவி உடையுடன் சித்தர் கோலத்தில் தோன்றி நீ என் பக்தனிடம் 8அணா வாங்கிக் கொண்டனையே! உனக்குக் கோபுரம் கட்டி முடியுமா?'' என்று அதட்டி மிரட்டிக் கேட்டார். நாங்கள் இரண்டு மூன்று முறை கோபுரம் கட்ட முயன்று முடியாமற் போய்விட்டது. அதனால் தான் வயலூர் முருகன் என் கனவில் தோன்றி இப்படிக் கேட்டார் என்று உணர்ந்தேன்.

மறுநாள் வயலூருக்குச் சென்று இங்கு யார் வந்தது? 8 அணா கொடுத்தார்களா?'' என்று எல்லோரையும் கேட்டேன் . குருக்கள் சென்னயையிலிருந்து வந்து திருப்புகழ் சபையார்கள் என்னிடம் 8 அணா கொடுத்தார்கள்'' என்று கூறினார். எனக்கு யார்? என்று விளங்கவில்லை. கோயில் விஸிட்டர் புத்தகத்தில் தாங்கள் கோயிலைப் பற்றி எழுதித் தங்கள் விலாசமும் குறிப்பிட்டிருந்தீர்கள். அதைப் பார்த்துத் தங்கள் முகவரி தெரிந்து தங்களுக்கு அந்த 8 அணாவை மணியாடர் செய்தேன். தாங்கள் தான் இந்தக் கோயிலுக்கு ராஜகோபுரத் திருப்பணி செய்ய வேண்டும்'' என்று கூறினார்.

நான், சென்னையில் நாள் தவறாமல் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. ஓய்வே கிடையாது. தவிர இந்த ஊரில் எனக்கு யாரும் தெரியாது. என்னால் எப்படி திருப்பணி செய்ய முடியும்?'' என்று கூறி ராஜகோர்புரத் திருப்பணிக்கு பத்திரிகை எழுதி அவர்கள் கையில் கொடுத்து விட்டுப் புறப்பட்டேன். அவர்கள் பத்திரிகை அச்சிடக் கொடுத்து ப்ரூப் காபியுடன் நிறுத்தி விட்டார்கள்.

பின்னர் ஒரு மாதம் பொறுத்து மீளவும் என்னை திருச்சிராப்பள்ளிக்கு விரிவுரைக்கு அழைத்துச்சென்றார்கள். திருச்சியில் வழக்கம்போல் லோகநாதப்பிள்ளை வீட்டில் தங்கியிருந்தேன். அங்கு உறையூர் சிறந்த அறப்பெருஞ்செல்வர். பி.வி.ஜே.முனிசாமிச் செட்டியார், உலகநாதன் செட்டியார், தோட்டா ராதாகிருஷ்ணன் செட்டியார் மூவரும் வந்து நீங்கள்தான் திருப்பணி செய்யவேண்டும். இது முருகன் கட்ளை என்று கூறினார்கள்.

நான் ஒருவாறு இசைந்தேன். பணத்திற்கு யார் பொறுப்பு? நான் அயலூரில் இருப்பவன். இங்கு உள்ளவர்கள் பணத்திற்குப் பொறுப்பாக இருந்தால் இத் திருப்பணி செய்ய இசைகின்றேன்'' என்றேன். முனிசாமிச் செட்டியார் சுவாமி! நான் பொறுப்பாக இருந்து பணத்தை கட்டிக் காத்துத் திருப்பணிக்கு உதவி செய்வேன்'' என்றார்.

நான் திருப்பணி செய்வதற்கு உடன்பட்டேன். நல்ல நாள் பார்த்துக் கால்கோள் விழா நடைபெற்றது. அந்தக் கால்கோள் விழாவின் போது நாச்சிக்குறிச்சி பெருநிலக்கிழார் துரைசாமி நாடார் வந்திருந்தார். அவரை நான் யாரென்று அறியேன். இந்த இராஜகோபுரத் திருப்பணிக்கு சுண்ணாம்பு முழுவதும் தாங்கள் வாங்கித் தரவேண்டும்'' என்று நான் கூறினேன். அதுபடியே அவர் ஒப்புக் கொண்டு கடைசி வரை சுண்ணாம்பு முழுவதும் வாங்கிக் கொடுத்தார்.

துறையூர் நா.சௌந்தர பாண்டியப்பிள்ளை ஸ்தபதியாராக இருந்து திருப்பணியைச் செய்து வந்தார். இத்திருப்பணிக்காக உறையூரில் மூன்று நாள் விரிவுரை செய்தேன். அக்காலத்தில் ஒலிபரப்பும் கருவி கிடைக்காது. மக்கள் திரளாக வந்து விரிவுரையைக் கேட்டார்கள். ஏகிரிமங்கலம் திரு சாந்தப்பிள்ளை அவர்களைக் கண்டு நீங்கள் ஆயிரம் ரூபா தரவேண்டுமென்று கேட்டேன். அவர் மறுமொழி கூறாமல் ஆயிரம் ரூபா தந்தார். அப்பொழுது ஆயிரம் ரூபா என்பது ஒரு லட்சத்துக்கு சமானம். திருச்சியில் ஒரு வாரம் தங்கி திருப்பணிக்கு வசூல் செய்தேன். 5000 ரூபாய் சேர்ந்தது.

இத்திருப்பணி இனிது நடைபெறும் பொருட்டு திருச்சிமலைக் கோட்டை நூற்றுக் கால் மண்டபத்தில் திருப்புகழ் தத்துவார்த்தப் பிரசங்கசபை என்று ஒரு நிறுவனத்தை நிறுவி மாதந்தோறும் அமாவாசையன்றும் அதற்கு மறுநாளும் டிக்கட்டு வைத்து முறையே விரிவுரை நடைபெற்றது. நான் சென்னையிலிருந்து அமாவாசைக்கு முதல் நாள் புறப்பட்டு திருச்சிக்கு வந்து இரண்டு நாள் விரிவுரையைச் செய்து விட்டு இரண்டு மூன்று நாள் தங்கி தனமும், மனமும் படைத்தவர்களிடம் பொருள் ஈட்டி அன்பர் முனிசாமிச் செட்டியாரிடம் கொடுத்துவிட்டு சென்னைக்குப் போவேன். நானும், முனிசாமிச்செட்டியாரும், லோகநாதப்பிள்ளையுமாக மூவரும் சேர்ந்து வசூல் செய்வோம்.

(தொடரும்)

# அன்ரன் இராஜநாயகத்தின் பூதவுடல் இன்று நல்லடக்கம்



யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த ரி.அன்ரன் இராஜநாயகம் அடிகளார் கொழும்பில் 12.07.2004 அன்று காலமானார். 14.07.2004 அன்று கொழும்பு சென்.லோறன்ஸ் தேவாலயத்தில் 4.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ்.நகருக்கு அவரின் பூதவுடல் எடுத்து வரப்பட்டது.

நேற்று மதியம் யாழ் நகர் வந்த இவரின் பூதவுடல் நேரடியாக புனித கென்றியரசர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைக்கப்பட்டது.

இவரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை காலை மரியன்னை பேராலயத்தில் வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித மரியன்னை பேராலய சேமக் காலையில் இறுதிச் சடங்குகளின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

கரம்பொன்னை பிறப்பிடமாகக்கொண்ட இவர் ரி.மகேந்திரன் அடிகளாரின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது.

1932ஆம் ஆண்டு பிறந்த இவர் 1957ஆம் ஆண்டு ரோமாபுரியில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். 1958ஆம் ஆண்டு மன்னார் உதவிப் பங்குத் தந்தையாகவும், 1960ஆம் ஆண்டு முதல் 1963ஆம் ஆண்டு வரை கென்றியரசர் கல்லூரியிலும், 1963 ஆம் ஆண்டு முதல் 1964 ஆண்டு வரை முல்லைத் தீவிலும் பணியாற்றினார். 1964 ஆம் முதல் 1966 ஆம் ஆண்டு வரை மடுத்தினார் குருமட அதிபராகவும், 1966 ஆம் ஆண்டு முதல் 1969 ஆம் ஆண்டு வரை ஆயர் இல்லத்திலும் பணி புரிந்தார்.

1969ஆம் ஆண்டு முதல் 1974ஆம் ஆண்டு வரை ரோமாபுரியில் குருக்கள் தங்கும் சம்பவுலோ கல்லூரி உப அதிபராகப் பணியாற்றினார். 1974 ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரை கனடாவில் கல்வி கற்றார். 1976ஆம் ஆண்டு முதல் 1988 புனித ஹென்ரியரசர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார்.

கல்லூரிப் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் 1989ஆம் ஆண்டு மானிப்பாய் பங்குத் தந்தையாகவும் பின்னர் 1993 ஆம் முதல் 1995 வரை யாழ். மரியன்னை பேராலய பங்குத் தந்தையாகவும் பணிபுரிந்தார். பின்னர் கொழும்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் செயலராகப் பணி யாற்றி ஓய்வு பெற்றார்.

## நேற்று வெளியான தமிழ் மொழியும் இலக்கியம் வினாத்தாள்பகுதி I இற்கான விடைகள்

### பகுதி I விடைகள்

| வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|
| 1. | (4) | 21. | (3) |
| 2. | (3) | 22. | (4) |
| 3 | (2) | 23. | (3) |
| 4. | (4) | 24. | (3) |
| 5. | (3) | 25. | (4) |
| 6. | (3) | 26. | (3) |
| 7. | (2) | 27. | (1) |
| 8. | (2) | 28. | (3) |
| 9. | (3) | 29. | (2) |
| 10. | (2) | 30. | (2) |
| 11. | (3) | 31. | (1) |
| 12. | (3) | 32. | (1) |
| 13. | (3) | 33. | (1) |
| 14. | (3) | 34. | (4) |
| 15. | (1) | 35. | (3) |
| 16. | (3) | 36. | (2) |
| 17. | (3) | 37. | (3) |
| 18. | (4) | 38. | (1) |
| 19. | (2) | 39. | (2) |
| 20. | (3) | 40. | (3) |

## விவாத அரங்கு -4

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


## ரூர் டி பிரான்ஸ்

# 10வது சுற்றில் றிச்சாட் விரன்கோ

## 7வது தடவையும் சாதனை!

தற்பொழுது நடைபெற்றுவரும் ரூர் டி பிரான்ஸ் உலக சைக்கிள் ஓட்டப்போட்டியின் 10வது சுற்றில் தொடர்ச்சியாக ஏழாவது வருடமும் வெற்றிபெற்றுச் சாதனை புரிந்தார் ரிச்சாட் விரன்கோ.





லியோகஸிலிருந்து செயின்ற் புலோர் நகரங்களுக்கிடையிலான 237கிலோ மீற்றர் தூரமான மலைப் பிரதேசத்தை சுமார் 15நிமிட இடைவெளி வித்தியாசத்தில் கடந்து "மலைகளின் அரசன்" எனும் சீருடையைப் பெற்றார்.

பிரான்ஸ் நாட்டின் மிகப்பிரபலமான சைக்கிள் ஓட்ட வீரரான விரன்கோ பல சர்ச்சைகளிலும் சிக்கித்தவிப்பவர். பிரான்சின் சுதந்திர தினத்தன்று அவர் பெற்றுக் கொண்ட இவ் வெற்றி அந்நாட்டவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம் இப் போட்டித் தொட ரின் பிரதான வீரர்களகக் கருதப் படும் ஜான் உல்ரிச்சும், லான்ஸ் ஆம்ஸ்ரோங்கும்தமது முன்னணி ஸ்தானங்களைத் தக்கவைத்துள்ளனர். (யே)

## வீழ்த்தப்படாத பிரேஸிலை

# பரகுவே அணி வீழ்த்தியது

## கொஸ்ராரிக்கா காலிறுதியில்


நடைபெற்றுவரும் கொபா அமெரிக்கா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் தொடர்ச்சியாகப் பதின்மூன்று வெற்றிகளைப் பெற்ற பிரேஸிஸ் அணியை பரகுவே 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.




குறூப் 'சீ'யில் பரகுவே அணி உருகுவே அணியை எதிர்த்தாடவுள்ளது. இதேவேளை, கொஸ்ரா றிக்காவுக்கும் சிலிஅணிக்குமிடையிலான போட்டியில் கொஸ்ராறிக்கா அணி 2-1 எனும் கோல்க்கணக்கில் வெற்றி பெற்றுக் காலிறுதியாட்டத்திற்குத் தெரிவான எட்டாவது அணியாகத் திகழ்கிறது.

அடுத்து நடைபெறவிருக்கும் காலிறுதியாட்டத்தில் பெரு அணி ஆர் ஜென்ரீன அணியைச் சந்திக்கவுள்ளது.

பிரேஸின் வீட்சி அதனை எவ்விதத்திலும் பாதிக்காத போதும் அவ்வணிக்குத் தகுந்த நேரத்தில் கிடைத்த எச்சரிக்கை சமிக்ஞை என்று அதன் பயிற்றுவிப்பாளர் தெரிவித்துள்ளார். (யே)



மக்லரனின் போர்மியூலா-1 போட்டிக்கான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய புதிய போட்டிக்காரைப் படத்தில் காண்கிறீர்கள்.

## மேர்ஸிடிஸ் பென்ஸ் ரெனிஸ்

# அகாஸி 800வது வெற்றி

## ரஸெட்ஸ்கி காலிறுதியில்

தற்பொழுது நடைபெற்றுவரும் மேர்சிடிஸ் பென்ஸ் பகிரங்க ரெனிஸ் போட்டிகளில் முந்நாள் ரெனிஸ் உலக ஜாம்பவானும், நட்சத்திர ரெனிஸ் விராங்கனை ஸ்டெ.்பி கிரா.்பின் கணவருமான அந்ரே




அகாஸி தனது வாழ்நாளில் 800வது வெற்றியைப் பெற்றுக்கொண்டார்.

34 வயதான அகாஸி தனது சக அமெரிக்க வீரர் அலெக்ஸ் பொகமொலோவை வீழ்த்தி இச்சாதனையைப் புரிந்தார். இவருக்கு முன்னர், ரெனிஸ் உலக ஜாம்பவான்களான ஜிம்மிக் கோனர்ஸ், இவான் லெண்டில், கில்லமோ வில்லாஸ் ஜோன் மக் என்ரோ, ஸ்ரெ.்பான் எக்பேர்க் ஆகியோர் இச்சாதனையை நிகழ்த்தியிருந்தனர். அகாஸி இவ்வரிசையில் '6வது இடத்திலிருக்கிறார். 1968ல் பகிரங்கப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் புல்தரைகளில் ஆதிக்கம் செலுத்தும் ரஸெட்ஸ்கி, கரோல் பெக்குடனான போட்டியில் 3-6,6-3,7-6 (7-2) எனும் செற் கணக்கில் வென்று மேர்சிடிஸ் பென்ஸ் பகிரங்க ரெனிஸ் வெற்றிக் கிண்ணத்தின் காலிறுதிப் போட்டியில் நுழைகின்றார். ஜேர்மன் வீரர் நிக்கொலஸ் கிய்.்பரை அவர் எதிர்கொள்ளக் காத்திருக்கிறார். (யே)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக்கழகத்தினால் யாழ்.மாவட்ட ரீதியில் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இப் போட்டித் தொடரில் பங்கு பற்றவிரும்பும் யாழ்.மாவட்டப் பெண்கள் அணியினர், பல்கலைக்கழகத்தின் உடற்கல்விப் பிரிவில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றக்கொள்ள முடியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 30ஆம்திகதி ஆகும். (யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 29 தினங்கள்

## அமெரிக்கத் தேரிவில்

# யங்கும் தெரிவாகவில்லை

தற்பொழுது அமெரிக்காவில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் தெரிவுப் போட்டிகளில் 400மீற்றர் உலக சாதனை வீரர் ஜெரோம்யங்கும் தெரிவாகத் தவறினார்.




தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துப்பாவனை தொடர்பில் இவரும் குற்றம் சாட்டப்பட்டு 4x400மீற்றர் சிட்னி ஒலிம்பிக் பதக்கம் இவரிடமிருந்து பறிக்கப்படலாம் என்று பேச்சுக்கள் அடிபடும் நிலையில் இவரது மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேபிரிவில் வெற்றிப் பதக்கம் வென்ற ரைறி வொஷிங்டனும் தகுதி பெறத் தவறியுள்ளார். மேரியன் ஜோன்ஸ், அவரது காதலரும் உலக 100மீற்றர் சாதனையாளர் மொன்ட் கொமெரியும் ஏற்கனவே தகுதியிழந்தவர்களாவா. (யே)


## எதென்சுக்கு வாருங்கள் பகுதி II

# ஒலிம்பிக் மைதானங்கள்

## பழைய ஒலிம்பிய ஸ்ரேடியம்

"எதென்சுக்கு வாருங்கள்" எனும் தலைப்பில் "வலம்புரியில்" ஏற்கனவே பிரசுரமான முதலாம் பகுதியின் தொடர்ச்சி இப்பகுதியில் தொடர்ந்து வெளிவரும்.

இம்முறை ஏதென்ஸ்ஸில் போட்டிகள் நடைபெற விருக்கும் ஐந்து மைதானங்களின் விபரங்களை ஏற்கனவே பார்த்து விட்டோம் ஆறா வதாக எதென்ஸின் பழைய ஒலிம்பியா ஸ்ரேடியம் பற்றி இன்று பார்ப்போம்.



கிறிஸ்துவுக்கு முன் 600வருடங்கள் பழமைவாய்ந்த ஹேரா ஆலயமும் ஒலிம்பிக் தீபஏற்றப்படும் செயூஸ் பீடமும் அமைந்துள்ள கி.மு.நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒலிம்பியா ஸ்ரேடியமே, புராதன ஒலிம்பிக் போட்டிகள் நடாத்தப்பட்ட ஸ்ரேடியமாகும்.

இம்முறை இங்கே பரிதிவட்டம் எறியும் போட்டிகள் நடைபெறவுள்ளன. 15ஆயிரம் பார்வையாளர்கள் புற்தரையில் இருந்து இந் நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவர். 64போட்டியாளர்கள் பங்கெடுக்கும் போட்டிகள் ஒகஸ்ட் 18ஆம் திகதி ஆரம்பமாகும்.

எதென்சுக்கு 320கிலோ மீற்றர் தென்மேற்கே அமைந்துள்ள இந்த ஸ்ரேடியத்தில் இயற்கைக்குப் பங்கம் வராத விதத்தில் போட்டிகள் முழுவதும் பகலிலேயே நடாத்தப்படும். (யே)

## இன்று ஒரு தகவல்

# இறைவன் இருக்கும் இடம்

காஞ்சிபுரத்தில் பல்லவராஜா ஒரு கோயில் கட்டினார். கைலாசநாதர் கோயில். அதற்கு கும்பாபிஷேகம் செய்வதற்கு ஒருநாள் குறித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். முதல் கடவுளை வேண்டினார். '' நீங்கள் இந்தக் கும்பாபிஷேகத்திற்கு நேரில் வந்து கலந்து கொள்ள வேண்டும்'' என்று.கடவுள் அந்த ராஜாவின் கனவில் வந்தார். '' நீ கும்பாபிஷேகம் வைத்திருக்கும் அதே நாள் அதே நேரம் எனக்கு இன்னொரு ஊரில் ஒரு கும்பாபிஷேகம் இருக்கிறது. அதற்குப் போக வேண்டும். அதாவது திருநின்றவூரில் எனது பக்தர் ஒருவர். அவரும் ஒரு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்கிறார். நான் அதற்குப் போக வேண்டியுள்ளது. அதனால் உனது திகதியை மாற்றிக் கொள்'' என்றார்.

கடவுள் தான் எங்கும் இருப்பவராயிற்றே. அவர் நினைத்தால் இரண்டு இடத்திலும் இருந்து கோயில் கும்பாபிஷேகத்தை நடத்த முடியாதா. ஏன் அப்படிச் செய்யவில்லை. ஒரு முக்கிய மான காரணத்திற்காகத்தான் திருநின்றவூரில் இருந்த பூசலார் ஈன்ற அந்த அடியாரின் பெரு மையை இந்த உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் கடவுள் அந்த ராஜாவிடம் அப்படிச் சொன்னார்.

சரி... அந்த அடியார்அப்படி என்ன தான் பெரிய கோவில் கட்டிவிட்டார். ராஜா கட்டிய கோயிலை விடவா பெரியது? அவர் கட்டியது கருங்கல்லினாலோ, மண்ணாலோ, மரத்தாலோ கட்டிய கோயில் அல்ல. அது மனதால் அடியார் தனது மனதிற்குள் உள்ள கோயில் மனக் கோயில் .அந்த அடியார் தனது மனதிற்குள்ளே மாதக் கணக்காக ஒவ்வொரு கல்லாகச் சேர்த்துக் கட்டிய கோயில்.

இந்த விடயம் ராஜாவுக்குத் தெரியாது. அவர் என்ன நினைத்து விட்டார். அது நான் கட்டிய கற் கோயிலை விடப் பெரியதாக இருக்கும் போலி ருக்கிறது என்று சரி... அப்படிப்பட்ட அந்தக் கோயிலைத் தரிசனம் செய்துவிட்டு வருவோம் என்று நினைத்து திருநின்றவூருக்குச் சென்றார்.

அங்கே போய்ப் பார்த்தால் கோயிலைக் காணவில்லை. கடைசியில் பூசலார் கட்டிய மனக் கோயில் தான் அது என்பதைப் புரிந்து கொண்டார் ராஜா. உடனே அந்த அடியாரின் காலில் விழுந்து வணங்குகிறார். அவரோ "இது மனதால் முயன்ற கோயில் இதற்கு இவ்வளவு பெருமையா?" என்று ஆச்சரியப்பட்டார்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆண்டவன் விரும்புவது ஆகப் பக்தியைத் தவிர புறத் தோற்றங்களை அல்ல. இதை நாம் புரிந்து கொண்டோம் என்றால் நமக்குள் எந்த வேறுபாடுகளும் வருவதற்கு வழியே இல்லை.

இன்னொரு ராஜா இருந்தார். அவர் ஆண்டவனுக்குப் படைப்பதற்காக ஒரு தார் நல்ல செவ்வாழைப் பழமாக பார்த்து வாங்கிக் கொண்டு வரச்சொன்னார். வேலைக்காரன் சென் றான். கடைத் தெருவில் ஒரு தார் பழம் வாங்கி னான். வரும் வழியில் அவனது குடிசை. அப்படி யே எட்டிப் பார்த்து விட்டுப் போகலாம் என்று நினைத்துப் போனான். அங்கே இவனது குழந்தை பாவம் பசியால் கத்திக் கொண்டிருந் தது. இவன் பார்த்தான் இவ்வளவு பெரிய தாரில் ஓரிரண்டு பழம் எடுத்தால் தெரியவா போகிறது என்று நினைத்து இரண்டு பழத்தைப் பிய்த்து அந்தக் குழந்தையிடம் கொடுத்தான். பிள்ளை இதைச் சாப்பிட்டு விட்டு விளையாடப் போய் விட்டது.

இவன் அதன் பின் வாழைப்பழத்தை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தான். இரண்டு பழம் பிய்த்திருந்தது. ராஜாவுக்குத் தெரிந்து விட்டது. இவனும் உண்மையைக் கூறிவிட்டான். உடனே ராஜா " கடவுளுக்குப் படைக்க வேண்டிய பொரு ளை குழந்தை எச்சில் படுத்த விட்டிருக்கிறாயே" என்று கூறி அவனைக் கட்டி வைத்துச் சாட்டை யால் அடித்தார் பாவம்.

மறுநாள் பழத்தைக் கோயிலுக்கு எடுத்துக் கொண்டு போனார்.கடவுள் முன் வைத்தார். கடவுள் கண் திறந்து பார்த்தார். பழம் அழுகியிருந்தது. "என்ன இது அழுகிய பழம்?'' என்றார். ராஜா முழித்தார்.நன்றாகத் தானே இருந்தது என்று நினைத்தார். அப்போது கடவுள் சொன்னாராம். "இதோ பார். இந்த தாரில் இரண்டு பழம் தான் நல்ல பழம். அதனை நேற்றே நான் சாப்பிட்டு விட்டேன்'' என்றார். அப்போது தான் ராஜாவுக் குப் புரிந்தது. ஏழைக் குழந்தையின் பசி தீர்க்க உதவிய அந்த இரண்டு பழம் தான் இறைவன் சாப்பிட்ட பழம் என்று. இறைவன் இருக்கும் இடம் எது? இதுதான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமாதானம் என்ற போர்வையில் இராணுவ நிலைகளைப் பலப்படுத்துகிறது அரசாங்கம்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அடக்கு முறைக் கொள்கையையே இன்றைய ஆட்சியாளர்களும் பின்பற்றி வருகின்றார்கள் என்பது தான் வெளிப்படையானதும், கசப்பானதுமான் உண்மை. எமது மண்ணில் நாம் சுதந்திரமாக,சுபீட்சமாக வாழ்வதையே விரும்புகின்றோம். திட்டமிடப்பட்ட சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் அடக்கு முறைகள் இனியும் எம் மண்ணில் வேண்டாம்.

எமது மக்களிற்கு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டிய அரசாங்கம், சமாதானத்தின் மீதான நம்பிக்கையை நிலைகுலைய வைத்து போரிற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதினை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், சமாதானத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சீரழிக்கும் நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எமது மக்களுக்கு ஒரு நிலையான, நீதியான தீர்வினைக் கொடுக்க முன்வராமல், போர் நிறுத்தம் என்ற போர்வையில் தமிழ் இனத்தின் விடுதலையை இழுத்தடித்துக் கொண்டு போகும் இந்த நிலையை மக்களாகிய நாம் இனியும் அனுமதிக்கப்போவதில்லை.

போரினைத் தொடங்குவதற்காக இராணுவத்தினைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளையே சிங்கள அரசாங்கம் முன்னெடுத்துச்செல்கின்றது. அந்த வகையில் தான் 12.07.2004 அன்றைய தினம் முகமாலை முன்னரங்க காவல் நிலைகளை பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பார்வையிட்டுச் சென்றுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினரிற்கு பயிற்சியளிப்பதில் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் முனைப்பாக செயற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எதனை வெளிப்படுத்துகின்றன? சமாதானம், சமாதானம் என தென்னிலங்கையின் ஆட்சியில் நிற்கும் அரசியல் பீடங்கள் கூறிக் கொண்டு தமிழர் தாயகப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளைப் பலப்படுத்துவதன் அர்த்தம் என்ன?

தீர்வினை எதிர்பார்த்து நிற்கும் மக்களின் சமாதானம் தொடர்பான நம்பிக்கையை தகர்த்தெறியும் நடவடிக்கையாகவே இவற்றை நாம் கருதுகின்றோம். எமது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடக்கு முறைக்குள் உள்ளாக்குவதும், எமதுமக்களின் உரிமையைக் கொடுக்க மறுப்பதும் காலத்திற்குக் காலம் ஆட்சிமாறி வரும் சிங்கள ஆட்சியாளர்களின் கொள்கையாகத் தான் இருந்து வருகின்றது என்றுள்ளது.

(உ)

# புலிகளைப் பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது

## ஆஸி. தூதுவருக்கு ஜோசப் எம்.பி. எடுத்துரைப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் உதவி உயர்ஸ்தானிகர் ஹேற் யோகனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் காலை அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகரத்தில் இடம்பெற்றுள்ளது.

சமாதான முனைப்புக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக இருப்பதாக இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.



அவுஸ்திரேலியாவின் உதவி உயர்ஸ்தானிகரின் அழைப்பை ஏற்று, அவரைச் சந்தித்திருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், கருணாவை அரசியல் ரீதியிலும், யுத்த ரீதியிலும் பயன்படுத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தவும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கவும் அரசாங்கம் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

(உ)

## இராசி பலன்

**16.07.2004**

**(ஆடி 1, வெள்ளிக்கிழமை)**

**சதுர்த்தசி பிற்பகல் 3.32மணி வரை**

**திருவாதிரை முன்னிரவு 7.28மணி வரை**

**இராகுகாலம் 10.30-12.00 மணி வரை**

**சுபநேரம் 6.00-7.30 மணி வரை**

ஆடிப்பிறப்பு

**மேடம்**
தடைப்பட்ட காரியம்கைகூடும், தனலாபம், தெய்வதரிசனம், விருந்துபசாரம்.

**இடபம்**
போசன சுகம், விவாதம், முயற்சி தாமதம், தனவிரயம்.

**மிதுனம்**
தேகநலன், தெய்வசிந்தை, சயன சுகம், பெரியோர் சந்திப்பு.

**கடகம்**
நண்பர்கள் விரோதம், உற்சாகம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், குடும்ப சுகம்.

**சிங்கம்**
தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும், பெருமையடைதல், தொழில் நன்மை.

**கன்னி**
அதிக பிரயாசை, அதிகாரம், தூரதேசச் செய்தி, தொழில் விருத்தி.

**துலாம்**
பிறருக்கு உதவுதல்,ரோக நிலை, பிரயாணம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
வாகன பயம், அமைதிக் குறைவு, காரிய தடங்கல், வீண் பகை.

**தனுசு**
தேகாரோக்கியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தெய்வதரிசனம், பொருள் சேர்க்கை.

**மகரம்**
நல்ல சம்பவம், உறவினர் வருகை, சத்துரு ஜெயம், காரிய அனுகூலம்.

**கும்பம்**
சிறுவியாதி, குடும்பக்கவலை, முயற்சி தாமதம்,தொழில் சிந்தை.

**மீனம்**
மாதாசுகம், போசன சுகம், புதிய திருப்பம், ரோக பயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# சேனாதியின் வித்துடலுக்கு பெருமளவானோர் அஞ்சலி

(மட்டக்களப்பு)

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்ரினன்ட் கேணல் சேனாதிராசாவின் வித்துடல் நேற்று முன்தினம் மாலை தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை கொக்கட்டிச் சோலை மாவட்டச் செயலகத்திலிருந்து மண்முனைத் துறையூடாக சேனாதிராசாவின் வித்துடல் மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு விடுதலைப்புலிகளின் தாமரைக்கேணி அலுவலகம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபம் ஆகியவற்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெரும் தொகையான மக்கள் சேனாதிராசாவுக்கு திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் வித்துடல் அவரது சொந்த இடமான செங்கலடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பொதுமக்கள், போராளிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் சேனாதிராசாவின் வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அங்கிருந்து வித்துடல் தாங்கிய பேழை செங்கலடி கறுத்தப் பாலமூடாக எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக கரடியனாறு மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. பின் அங்கிருந்து வித்துடல் தாங்கிய பேழை தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவடிமுன்மாரிக்கோட்ட இராணுவத் தளபதி ரமணன் உட்பட பல தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (உ-121)

# ஏ-9 பாதை மீள் கட்டமைப்பு பணிகள் யாவும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கண்டி ஏ-9 பாதைக்கான மீள் கட்டமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓமந்தையில் இருந்து 103 கிலோ மீற்றர் நீளம் வரையில் ஏ-9 நெடுஞ்சாலையின் மீள் கட்டமைப்புக்கள் பூர்த்தியடைந்துள்ளதாக இலங்கை அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இவ் வருடம் ஜனவரி மாதம் ஆரம்பமான மீள்கட்டமைப்பு வேலைகளே தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக அவ்வதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இந்த மீள் கட்டமைப்பிற்கு 613 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன்,இதில் 500மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது. (உ-121)

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின் அல்லது - குறள்

வலம்புரி

## யுத்தத்திற்குத் தயார் எனின் வெற்றிபெற முடியுமா?

யுத்தத்தை எதிர்கொள்வதற்கு இராணுவமும் கடற்படையும் தயாராக இருப்பதாக புதிய இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

புதிதாகப் பதவியேற்கும் இராணுவத் தளபதிகள் வழமையில் கூறிக்கொள்ளும் விடயத்தையே சாந்த கொட்டேகொடவும் கூறியுள்ளார். எனினும், அவர் கூறிய காலமும் நேரமும் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற கையோடு சமாதானத்திற்கு இராணுவம் பூரண ஆதரவை வழ்ங்கும் எனக் கூறிய இராணுவத் தளபதி, தன்னை ஒரு சமாதானப் பிரியராகக் காட்டிக் கொண்டார்.

மட்டக்களப்பிலிருந்து கருணா கொழும்பிற்குத் தப்பிச் செல்வதற்கு இராணுவமே பாதுகாப்பு வழங்கியது என்ற குற்றச்சாட்டை மறுப்பதற்கு அது விடயத்தில் தனக்கு எதுவுமே தெரியாதெனக் கூறிய இராணுவத் தளபதி, இப்போது யுத்தத்திற்குத் தயாரென அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் இராணுவத் தளபதிகள் படையினரை உஷார் நிலையில் வைத்திருப்பதற்காக யுத்தத்திற்குத்தாம் அஞ்சவில்லை எனக் காட்டிக்கொண்டதுபோல் புதியவரும் அதே வழமையைக் கையாண்டுள்ளார்.

கடந்த இருபது வருட காலமாக நாட்டில் யுத்தம் நடைபெற்றபோது இலங்கை இராணுவத்தின் வெற்றி எத்தகையது என்பதை நாடும் சர்வதேசமும் நன்கறியும்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் படையிலிருந்து தப்பியோடியவர்களை இன்னமும் தேடிக்கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. அதேவேளை படைக்கு ஆள்சேர்ப்பதில் அரசு தோல்வி கண்டுவிட்டது. ஆக, போரிற்குப் போகாத ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற இனவாதக்கட்சிகளும், குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள்ளிருந்துகொண்டு தகவல் கொடுக்கும் இராணுவத் தளபதிகளுமே போருக்குத் தயாராக இருக்கின்றனர்.

ஆனால் போர்க்களத்தில் போராடவேண்டிய இராணுவச் சிப்பாய்கள் வெடியோசை கேட்டு உளப்பாதிப்படைந்த நிலையில், விரக்தியடைந்துள்ளனர். இவ்வாறு இலங்கைப் படைநிலை குலைந்திருக்கும் வேளையில் முப்படைகளும் போருக்குத் தயாராக இருப்பதாகக் கூறலாம். ஆனால், அவர்களால் வெற்றிகொள்ள முடியுமா? என்பதே இங்கு கேள்விக்குரியது.

விடுதலைப்புலிகளின் உக்கிரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இலங்கை இராணுவத்தைப் பாதுகாப்பதற்காக ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்திய இராணுவத்தை வரவழைத்திருந்தார். இந்திய இராணுவத்தின் பின்னால் மறைந்திருந்து உயிர்ப்பாதுகாப்புப் பெற்ற இலங்கை இராணுவம் இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியுடன் தனது நகர்வை முன்னெடுத்தது. எனினும் அதிலும் தோல்வியே மிஞ்சியது.

இவற்றின் மூலம் விடுதலைப்புலிகளை எதிர்கொள்ளும் சக்தி இலங்கைப் படைகளுக்கு இல்லை என்ற உண்மைநிலையை உணர்ந்த பின்னரே விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என்ற முடிவுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் வந்தனர்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது இராணுவமும் கடற்படையும் யுத்தத்திற்கு தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி கூறியிருப்பது ஆச்சரியமானது. ஆயுத பலத்திலும் ஆட்பலத்திலும் மிக உன்னதமான வளர்ச்சியை பெற்றுள்ள விடுதலைப்புலிகளை சிங்கள படைகள் எதிர்கொள்வது என்பது இனிமேல் முடியாத காரியமாகும்.

அவ்வாறு இலங்கைப் படைகள் யுத்தத்தை மேற்கொண்டாலும் அவற்றின் தாக்குதல் நடவடிக்கையானது பொதுமக்கள் மீதும், பொதுமக்களின் உடைமைகள் மீதும் நடைபெறுமே தவிர விடுதலைப்புலிகள் மீதல்ல என்பது இங்கு உணரப்பட வேண்டிய விடயமாகும்.


# தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்தாலோசனை

## விரைவில் நடத்த ஜனாதிபதி முனைப்பு

(கொழும்பு)

நாட்டின் நன்மை கருதி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கப்பட்டு அரசியலை மேற்கொள்ள ஜனாதிபதி ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது



தொடர்பில் தொடர்ந்தும் இழுபறிநிலை காணப் படுகின்றது. குறிப்பாக விடு தலைப் புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் குறிதது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கடும் எதிர்ப்புத தெரிவித்து வருவதோடு பகிரங்கமாக தமது அதிருப்தியையும் வெளிப் படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் தமது அரசாங்கத்தின் பலவீனங்களை நன்கு அறிந்துள்ள ஜனாதிபதி எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு அடிப்படையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்காவுடன் ஜனா திபதி முக்கிய சந்திப்பொன்றினை நடாத்தவுள்ளார்.



இந்தச் சந்திப்பின் போது நாட்டின் இன முரண்பாட்டு நிலைக் குத் தீர்வு காண்பது தொடர் பில இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து ஆராயப் படவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது தேசிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்குவது குறித்து ஆராயப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதேவளை, ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்கும் பட்சத்தில் சில உறுதியான முடிவுகளை மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி நம்பிக்கை கொண்டுள்ளார்.

குறிப்பாக ஜே.வி.பி.யின் அழுத்தங்களுக்குப் பணியாமல் சமாதான முயற்சிகளை முன்கொண்டுவர முடியும் என்று ஜனாதிபதி எண்ணியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-121)

# இடமாற்றத்தை ஏற்காத இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டிற்கான இடமாற்றம் பெற்றும் இது வரையில் கடமைகளைப் பொறுப்பேறகாத உத்தியோகத்தாகளுக்கு எதிராக மாகாண பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.ஒ

இதன் பிரகாரம் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டும் கடமைகளைப் பொறுப்பேற்காதோர் பற்றிய விபரங்களை திணைக்களத் தலைவர்களூடாக பொது நிர்வாக அமைச்சு கோரியுள்ளதாக தெரிய வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் பொதுத் தேர்தல் காரணமாக கடந்த மே மாதம் வரை இவ் இடமாற்றம் பிற்போடப்பட்டிருந்தது.

இவ்வாறு கடந்த மே மாதம் முதல் இடமாற்றம் அமுலுக்கு வந்தும் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்காததனால் பல திணைக்களங்களில் நிலவி வரும் ஆளணிப் பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டே இந் நடவடிக்கையை மாகாண பொது நிர்வாக அமைச்சு எடுத்துள்ளது.

(உ-4,61)

## பொலிஸ் பதவி நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதி – ஜே.வி.பி. இடையே இழுபறி

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸ் துறைப் பதவி நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்டிருந்த பட்டியலின் அடிப்படையிலேயே இந்தப் பதவி உயாவுகள் வழங்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.யினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான தமது அதிருப்தியைத் தெரிவிக்கும் கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள ஜே.வி.பி., இப்பதவி உயர்வு வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. அதனால் இப்பதவி நியமனங்கள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் ஜே.வி.பி.யினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-121)

## ஹெல உறுமய,கருணா அணி, ஈ.பி.டி.பி. கூட்டணியில் புதியதோர் கட்சி?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவையும் இணைத்துக்கொண்டு, ஹெல உறுமய மற்றும் ஈ.பி.டி.பி. உட்பட ஒருசில இனவாதிகள் இணைந்து, புதிய கூட்டுக கட்சியொன்றை அமைக்க கடும் இரகசிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

ஹெல உறுமயவும் ஈ.பி.டி.பி.யும் இணைந்து செயற்பட ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக இணைந்து குரல் கொடுக்கக்கூடிய கருணா உட்பட இன்னும் சிலரையும் இணைத்து ஒரு புதிய கூட்டுக் கட்சியாக செயற்படுவது குறித்து இரகசிய பிரயத்தனங்கள் இடம்பெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.இக கூட்டணியில் சில ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், இனவாத அரசியல்வாதிகளையும் இணைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

(உ)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஆன்மாவின் தூய்மை மனதால் முயன்று எய்திய ஒன்றல்ல. அது இயல்பாகவே தூய்மையாக இருப்பது. எனவே அதற்குக் காலை மாலை என்ற காலப் பாகுபாடு கிடையாது.

சுவாமி விவேகானந்தர்

# சபாநாயகரை பதவி விலக்குவது ஜனநாயகத்திற்கு முரணானது

## ஜி.எல். பீரிஸ் காட்டமாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சபாநாயகரைப் பதவி நீக்குவதற்கு பல நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். குறைந்தது சபாநாயகருக்கு எதிராக குற்றச் சாட்டுகளாவது தெரிவிக்கப்பட்டிருக்கவேண்டும். சபாநாயகர் அரசியல் காரணங்களுக்காகப் பதவி இறக்கப்படமுடியாது. இதை மீறி பெறுமதியான காரணங்கள் எதுவும் இன்றி அரசு சபாநாயகரைப் பதவி அகற்ற விரும்பினால் அது நாட்டின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்.



ஜனநாயகக் கொள்கைகளை சபாநாயகர் லொக்கு பண்டார மதிப்பவராக இருந்தால் அவர் சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்து சபாநாயகர் இல்லத்தையும் விட்டு ஒரு ஜென்டில் மேனாக வெளியேற வேண்டும் என ஜே.வி.பியும் சுதந்திர முன்னணியும் தெரிவித்துள்ள நிலை யில் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி எஸ். பி. திஸாநாயக்க தெரிவிக்கையில்,

லொக்கு பண்டாரவின் தேர்தல் தொகுதியான அப்புத்தளையில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது என்ற காரணத்திற்காக அவரை சபாநாயகர் பதவியில் இருந்து நீக்க அரசு விரும்பினால் ஜனாதிபதியின் தேர்தல் தொகுதியான அத்தனகல்லவில் மார்ச் 2002 இல் பொ.ஐ.மு. தோல்வியடைந்திருந்த வேளையில் ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும்.

பொதுவாக ஒரு புதிய அரசாங்கத்திற்கு முதல் சில மாதங்கள் தேனிலவுபோலவே இருக்கும். ஆனால் அரசுக்கு முதல் 3 மாதங்களில் அதன் பிரபல்யம் சரிவு கண்டுள்ளது என்றும் கூறினார்.

(உ-6)

## கடமையின்போது கவனயீனமாக நடந்த சத்திர சிகிச்சை நிபுணர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கடமையின்போது கவனயீனமாக நடந்துகொண்டார் என்று தெரிவித்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வி.டபிள்யூ.வீரசூரியாவை பதவியிலிருந்து இடைநிறுத்தும்படி சுகாதார அமைச்சர் நிமால் சிறி பாலடிசில்வா சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் விடுத்த பணிப்புரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, பதுளை வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய நிபுணா எம்.எம்.பொன்ராஜாவின் மரணம் சம்பந்தமான விசாரணையின் அறிக்கையின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணர் பொன்ராஜா மரணமடைந்த தினத்தன்று கடமையில் இருக்கவேண்டிய சத்திர சிகிச்சை நிபுணர் வி.டபிள்யூ.வீரசூரியா கடமையில் இருக்கவில்லையென விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எனவே கடமையை உதாசீனம் செய்துகொள்ளும் வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன் குற்றவாளிகளாக கருதப்படுவோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும கேட்கப்பட்டுள்ளது. (உ-60,10)

### சிறைச்சாலை அதிகாரி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரிக்கும் சிறைக்காவலர் ஒருவருககுமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருவரும் காயமுற்ற நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (த-8)

## சபாநாயகரை பதவி விலகக் கோருவது அர்த்தமற்றது

### அரசை சாடுகிறது ஐ.தே.க.

பாராளுமன்றத்தினுள் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத வெட்கக்கேடான நிலைமையை மூடி மறைப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு வருவதாக ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் டயஸ் சிறிஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு அரசாங்கம் வெற்றி பெற்ற காரணத்திற்காக சபாநாயகர் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமென விமல் வீரவன்ஸ கோருவது அர்த்தமற்றது, இதேவேளை மாகாணசபைத் தேர்தலில் தமது தேர்தல் தொகுதியில் வெல்ல முடியாத டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டுமென்று நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

### மட்டு....

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களின் கைக்ளுக்கு எவ்வாறு துப்பாக்கி கிடைத்தது எனவும் அவ்வாறு துப்பாக்கி கிடைத்தது பாரிய பிரச்சினையாகும் எனவும் இது தொடர்பாக ஆராய்ந்து சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (121)


**திருமறைக் கலாமன்றம்**
தயாரித்து வழங்கும்
**ஞானசௌந்தரி** (இசை நாடகம்)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் நாளையும், நாளை மறுதினமும் (ஜூலை 17,18-2004 சனி, ஞாயிறு) மன்ற அரங்கில் மாலை 7.30 மணிக்கு மேடையேறுகின்றது.

அன்பளிப்பு 30/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238. பிரதான வீதி
யாழ்ப்பாணம் (C/370) திருமறைக் கலாமன்றம்



**உத்தரியத் தாய் மரியே**

பொங்குகடல் நடுவே
பொன்னொளியாம் மாமரியே
செங்கமல மலர் குலுங்கும்
செபமாலைத் தாய் மரியே
வெங்கதிரோன் ஒளிக்கீற்றின்
வெண்ணிலவின் இராக்கினியே
எங்கும் விளங்கு தயை
உத்தரியத் தாய் மரியே
அங்கஞ் சிலித்துருகி
அடியேன் தாட்பணிந்தேன்.
வெங்கொடுமை இல்லாதொழிய்
வரமருள்வாய் கார்மேல் தாயே.

(ஏகலைவன்)
ச.சேவியர் வில்பிரட
அல்லைப்பிட்டி – 3

(C/371)

இன்று (16.07.2004) நடைபெறும் அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னையின் பெருவிழாவையொட்டிய அறுசீர் விருத்தம்.



**தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை**

**இரண்டாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்

**சுந்தர் வெளியீடு**

844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)


## நிராயுத பாணிகளான புலிகளை தாக்குவது கோழைத்தனமானது

### லெப்.கேணல் சேனாதியின் இரங்கற் கூட்டத்தில் ஜெயானந்த மூர்த்தி

(மட்டக்களப்பு)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிராயுதபாணிகளாக அரசியல் பணியில் ஈடுபடும் விடுதலைப் புலிகள் மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்துவது கோழைத்தனமான செயல் அது சமாதானத்தைக் கேள்விக்குறியாக்கும் இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மாவீரர் லெப்ரினன்ட் கேணல் சேனாதிராசாவின் இரங்கற் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் மக்களின் விடுதலைக்காக சேனாதிராசா போன்று பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் தியாகத்தால் உருவான சமாதானச் சூழலை தீய சக்திகள் குழப்ப நினைப்பதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறான துப்பாக்கிக் கலாசாரம் தொடருமாகவிருந்தால் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியுமே ஏற்படும். எனவே அரசு இவ்விடயத்தில் கவனம் செலுத்தி குழப்பத்தை விளைவிக்கும் சக்திகளை இனங்கண்டு அகற்றுவதுடன் சமாதானத்துக்கான சூழலை உருவாக்க வேண்டும். மாவீரர் லெப்ரினன்ட் கேணல் சேனாதி மக்களிடையே நன்மதிப்பு பெற்றவர். மக்களுடன் ஐக்கியமாக பழகி தமது அரசியற் பணிகளை முன்னெடுத்துச் சென்றவர். அவரது இழப்பு இம் மாவட்ட மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேரிழப்பு எனவும் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து கொள்ளுகின்றோம் என்றார். நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன் ஆகியோரும் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்தினர். (த)

## பீடாதிபதிகளின் உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் பீடாதிபதிகள் மற்றும் கல்வியமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கிடையிலான உயர் மட்ட மாநாடு ஒன்று நாளை சனிக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வது குறித்து இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் கடந்த இருமாத காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகளுக்காக கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக விளக்கமளிக்கப் படவுள்ளது. (உ-18)

### வடக்குக் கிழக்கு

## மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து இன்று சமாச அலுவலகத்தில் சந்திப்பு

(திருநெல்வேலி)

வடக்குக்கிழக்கு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து இன்று பி.ப 2.30 மணிக்கு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் சமாசத் தலைவர் எஸ்.தவரத்தினம தலைமையில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

சமாசப் பிரதிநிதிகள், கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் இச்சந்திப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, இச்சந்திப்பில் மன்னார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசப்பிரதிநிதிக்ளும் பங்கேற்கவுள்ளனர். (உ-43)

### வெடிமருந்து....

எதிர்வரும் 19ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக மாவட்ட நீதிவான் சிறிநந்தசேகரம் உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த சில நாட்களாக மீனவர்களின் படகுகள் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-19,43)

### நீதியமைச்சர்...

சேர்ந்தது என்பது பற்றி இந்த அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிபபார் என்று சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூப் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக்குள் துப்பாக்கி கொண்டுசெல்லப்பட்ட சம்பவத்துக்கும் சிறைக் காவலர்களுக்கும் தொடர்புகள் இருந்திருக்கும். அவை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறைச்சாலை ஆணையாளர் ரூபி மர்சூப் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### சச்சி மாஸ்டரின்....

முரளி என்பவருக்கு காயம் ஏற்பட்டதை அவதானித்த கொலையாளி தவறுதலாக சுட்டுவிட்டதாக தெரிவித்து முரளியிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

கொலைச் சந்தேக நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் சச்சிமாஸ்டர் வைத்திருந்த கைத்துப்பாக்கியாலேயே அவரையும் அவரது சகாவையும் சுட்டதாகவும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கைக்குண்டுகள் என்பனவும் கூட அவருடையதே என்றும் கொலையாளி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலைச் சந்தேக நபர் படுத்திருந்த தலையணைக்குக்கீழ் இருந்து இரண்டு கடிதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். அதில் கருணா அணியினர் தேசத் துரோகிகள் என்றும் அவர்களை ஒருபோதும் பொதுமக்கள் மன்னிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் தான் இறந்தால் தனது உடலை தென் கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு வழங்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி அஜ்மீர் நேற்று மாலை சிறைச்சாலைக்கு சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டார். சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டார். சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் மூன்று கைதிகள் சாட்சியம் அளித்தனர். இருவரது மரணமும் கொலையென தீர்பளித்த நீதிபதி உறவினர் உரிமைகோரும் பட்சத்தில் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

### கருணாவின்.....

சாந்தகுமார் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப சந்தேக நபர் இருவரையும் சுட்டுக்கொன்று மற்றுமொரு கைதியைக் காயப்படுத்திவிட்டு துப்பாக்கியுடன் சிறைச்சாலையின் கூரைமீது ஏறிநின்றவாறு இராணுவமோ பொலிஸாரோ தன்னை நெருங்கினால் தன்னிடமுள்ள குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அச்சுறுத்தினார். மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க முன்னிலையிலேயே தன்னை விசாரணை செய்யவேண்டுமென்றும் தன்னை மட்டக்களப்பு சிறைசசாலையில் இருந்து வேறெந்த சிறைச்சாலைக்கும் மாற்றக் கூடாதென்றும் நிபந்தனை விதித்தார். அத்துடன் தமிழ்த் துரோகிகளை சுட்டுக்கொன்று விட்டேன் என்றும் கூக்குரலிட்டார்.

இதனையடுத்து பொலிஸார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு அறிவித்தனர். அங்கு விரைந்து வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் முன்னிலையில் சந்தேக நபர் சரணடைந்தார். அவரது நிபந்தனையின் பிரகாரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னிலையில் நேற்றுக்காலை 10.45 மணிக்கு பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கொலைச் சந்தேக நபரான மகேந்திரன் புவிதரனிடம் இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னிலையில் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இரண்டு வெற்றுத் தோட்டாக்கள், மைக்ரோ ரக சிறிய கைத்துப்பாக்கி ஒன்று, மூன்று தோட்டாக்கள் அடங்கிய மகசின் ஒன்று, இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், இரண்டு கைக்குண்டுகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு சிறைச்சாலை வளாகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் மட்டக்களப்பு அக்கரைப்பற்றுப் பகுதிகளின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் சுட்டுக்கொல்லப்பட்ட கருணாவின் அணியைச் சேர்ந்த இருவரும் மட்டக்களப்பில் ஆயுதங்களுடன் நடமாடியபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். காயமடைந்தவர் திருக்கோவிலைச் சேர்ந்த தியாகராசா முரளிதரன் கல்லடிப் பாலத்தில் வைத்து கடந்த வருடம் யூலை மாதம் 17ஆம் திகதி நான்கு பெண்கள் உட்பட எட்டுப் பேர்களுடன் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4-62)

இப்பத்திரிகை வலம்பரி அன். கோ ஸ்காபனக்காரால் இல.15 வெள்ளாங்கெரு. யாம்ப்பாணம் என்னும் மகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.